பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 17 வெள்ளிக்கிழமை (31-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:187

இனங்கள், மொழிகள், நாடுகள் என்ற எல்லைகளுக்கு அப்பால் உலக மக்களை ஒன்றிணைக்கும் தேசிய விளையாட்டு விழாவான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று தென் கொரியத் தலைநகர் சியோலில் ஆரம்பமாகின்றன. தொடர்ந்து ஜப்பானிலும் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

உலகெங்கும் கோடிக்கணக்கான ரசிகர்கள் இந்த உதைபந்தாட்டத் திருவிழாவைக் காணத் தயாராக இருக்கின்றனர். அவர்களில் ஜப்பானைச் சேர்ந்த மூன்று வயதான அலிசா யோகோனோ என்ற இந்தச் சிறுமியும் ஒருத்தி. பெல்ஜியம் நாட்டு உதைபந்தாட்ட அணியின் பட்டியை அணிந்து கொண்டு வியப்பால் விழிகள் விரிய நின்ற இச்சிறுமியை ஜப்பானின் கே.கே. விங் ஸ்ரேடியம் அருகே ரொய்ட்டர் படப்பிடிப்பாளர் தனது கமெராவினுள் ''கிளிக்' செய்துகொண்டார்.



# முதற் கட்டப் பேச்சில் இடைக்கால நிர்வாகம் இடம்பெறமாட்டாது!

கொழும்பு,மே31

காட்சி மாறுகிறது; திட்டம் வேறாகிறது. எதிர்பார்ப்பதற்கு மாறாகக் காரியம் நடக்கப்போகிறது. அரசுக்கும் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெற இருக்கும் ஆரம்பப் பேச்சு முன்னர் தீர்மானித்தபடி இடைக்கால நிர்வாகம் பற்றியதாக இருக்காது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விருப்பம்போல் பிரச்சினை சம்பந்தமான மூலாதார விடயங்களே நிகழ்ச்சிநிரலில் இடம்பெறும். அவை பற்றியே பேசப்படும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இப்படிப் புதிதாக முடிவு செய்திருக்கிறார் என்று தெரியவருகிறது. (ஐ)

# பேச்சுக்கான திகதி, தடை நீக்கம் இரண்டும் ஏக காலத்தில் அறிவிப்பு!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,மே31

தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடி சமாதானப் பேச்சுக்கான திகதியும், புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் குறித்தும் ஏக காலத்தில் அறிவிக்கப்படும். இப்பேச்சுக்கள் ஜூன் மாத இறுதியில் அல்லது ஜூலை மாத முதல்வாரத்தில் நடைபெறும்.

அரசாங்கத் தரப்பில் நான்கு பிரதிநிதிகள் பேச்சுக்களில் கலந்துகொள்வார்கள்.

அமைச்சரவைப் பேச்சாளரான அரசியல் சட்டவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று இவற்றை அறிவித்தார்.

தாய்லாந்தில் பேச்சுக்கான திகதி நிர்ணயமும், விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடைநீக்கமும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை என்றும் அதனால் இவையிரண்டும் குறித்து அரசாங்கம் ஏக காலத்தில் அறிவிக்கும் என்றும் அமைச்சர் பீரிஸ் சொன்னார்.

அமைச்சரவைக் கூட்டம் தொடர்பாக தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

தாய்லாந்து பேச்சுக்களில் அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொள்ளும் நான்கு பிரதிநிதிகளின் பெயர்களைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கடலில் மணல்பிட்டியில் 33 மணிநேரம் உணவு, தண்ணீர் இன்றி தவித்தோம்!

## படகு விபத்தில் உயிர் தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம்,மே31

தமிழகத்தில் இருந்து வன்னி நோக்கி பிளாஸ்டிக் படகில் திரும்பிக் கொண்டிருந்தோம். அச்சமயம் கடும் காற்றுக் காரணமாக எங்கள் படகு திடீரெனக் கவிழ்ந்தது. எனது மனைவியும் மகளும் மற்றும் இரு பெண்களும் கடலில் மூழ்கினர். படகைப் பிடித்தவாறு நாங்கள் மணற்பாறை ஒன்றில் கரை சேர்ந்தோம். அந்தப் பாறையில் 33 மணிநேரம் உணவு, தண்ணீர் எதுவும் இன்றிக் காத்திருந்தோம்.

- மன்னாரில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற படகு விபத்து தொடர்பாக அந்த விபத்தில் உயிர் தப்பிய

(12ஆம் பக்கம் பார்க்க)

# மணம்முடிக்க வந்த யுவதியும் படகு விபத்தில் உயிரிழப்பு!

## டென்மார்க் மணமகன் இங்கு தகவல்

யாழ்ப்பாணம்,மே31

டென்மார்க்கைச் சேர்ந்த மணமகன் ஒருவரைத் திருமணம் செய்வதற்காக வந்த யுவதி ஒருவரும் கடந்த சனியன்று மன்னார்க் கடலில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்திருக்கிறார். இவரது சடலமும் புங்குடுதீவில் கரை ஒதுங்கியிருக்கிறது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த சகீலா என்னும் யுவதிக்கே இந்த அவலமரணம் நேர்ந்திருக்கிறது. இவரை மணம் முடிப்பதற்காக கொழும்புக்கு வந்திருந்த மணமகன் மன்னார் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார்.

(12ஆம் பத்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



...பள்ளிக்கூட நூலகங்கள் கிடக்கட்டும். பொதுநூலகத்தை எப்ப காணும் திறக்கிறது?

# சமாதானப் பேச்சுக்கு பிரிட்டன் முழு ஆதரவு!

லண்டன்,மே31

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயரைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான சமாதான முயற்சிகள் குறித்து இரு தலைவர்களும் ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பை அடுத்து பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலகம் அரசு - புலிகள் இயக்கத்துக்கிடையிலான நேரடி சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவளிக்கப்படும் என்று அறிவித்தது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"புலிகள் இயக்கம் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும். இரு தரப்பினருக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகும். அதற்கு எமது முழு ஆதரவு உண்டு. சமாதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயத்துடன் வவுனியாவில் சடலம்

வவுனியா,மே31

வவுனியா, கட்டையடம்பன்குளம், சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் கடந்த 28ஆம் திகதி அதிகாலை ஒரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. 55 வயதுடைய சுப்பிரமணியம் என்பவரின் இச்சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

சடலம் அன்று காலை வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. இவரது மரணத்துக்கு தனிப்பட்ட காரணமா அல்லது வேறு காரணங்கள் இருக்கலாமா என்பது குறித்து பொலீஸார் விசாரணை செயது வருகின்றனர். (ஐ-10)

# இந்தியப் போர்க்கப்பலும் இலங்கைக்கு வருகிறது!

கொழும்பு,மே31

இந்தியப் போர்க்கப்பல் ஒன்று விரைவில் கொழும்பு வரவுள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு அடையாளமாக அடுத்த இரு வாரங்களுக்குள் அந்தக் கப்பல் இங்கு வரும்.

இந்த ஒத்துழைப்பின்கீழ் கடல் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பல புதிய நடவடிக்கைகள் நடை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நூலகங்களை அமைச்சர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல் ராஜபக்ஷ வடமராட்சி வலயத்தில் ஆறு பாடசாலைகளிலும், யாழ்.வலயத்தில் மூன்று பாடசாலைகளிலும் நேற்று நூலகங்களைத் திறந்து வைத்தார்.

(விரிவான செய்தி, படங்கள் 2ஆம் பக்கத்தில்) (ஐ-3-173-51)

# 50 பாடசாலைகளில் இருந்து ஜூன் 20ஆம் திகதிக்குமுன் படையினர் வெளியேறுவர்

குருநகர்,மே31

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்கு இணங்க வடக்கு - கிழக்கு மாகாணத்தில் படையினர் தங்கியுள்ள 52 பாடசாலைகளில் 50 பாடசாலைகளில் இருந்து படையினர் எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறி அவைகள் சம்பந்தப்பட்ட கல்வி வலயங்களிடம் ஒப்படைக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.சண்முகலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு கணனி, தொலைக்காட்சி மற்றும் விஞ்ஞான புத்தகங்கள் வழங்கும் வைபவத்துக்கு தலைமை வகித்து

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பாடசாலை கல்வி அமைச்சர் சுரநிமல் ராஜபக்ஷ நேற்று மாலை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுவதை படத்தில் காணலாம். அருகில் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் காணப்படுகிறார். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்:அற்புதன்)

## புகைத்தல் எதிர்ப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே31

உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டுயாழ். பல்கலைக கழக சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட டில் மருத்துவ சமூகவியல் கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுக நல சமூக கல்வியாளர் எஸ்.இராஜேந் திரா 'புகைத்தலின் சமூக பண்பாட்டு பின்னணி' என்ற தலைப்பிலும் மருத் துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் க.சிவ நேசன 'புகைத்தலின் கேடுகள்' என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குவர். (ஐ-4-13)



யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான சமுர்த்தி ட்டம் தொடர்பான செயலமர்வு ஒன்று நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. அச்செயலமர்வில் முர்த்தி அதிகார சபையின் வடக்கு - கிழக்கு, பெருந்தோட்டப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் திருமதி ம்.வி.பந்துசேன உரையாற்றுவதையும் அருகில் உதவிப் பணிப்பாளர் என்.நடேசராஜா அமர்ந்திருப்பதை ம் செயலமர்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அற்புதன்)

# பிரபாகரனின் பெற்றோர் நாடு திரும்பவில்லை

கொழும்பு,மே31

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் பெற்றோா இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்புவர் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அவர்கள் நாடு திரும்பவில்லை.

நேற்று முன்தினம் மாலை அவர் கள் நாடு திரும்பிவிட்டனர் என்று நேற்று சில இலத்திரனியல் ஊடகங் கள் வெளியிட்ட செய்தியை அகதிக ளுக்கான ஐ.நா. தூதரகம் நேற்று மறுத்துவிட்டது.

இது தொடர்பாக தூதரகத்தின் அதிகாரி மைக்டெசிஸ்ட்டியை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித ததாவது:-

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்புவதற்கு 85 பேர் தற்போது எமது அமைப்பிடம் விண்ணப்பித்தி ருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் முதற் கட்ட மாக மூன்று இலங்கையர்கள் இந்தி யாவிலிருந்து அழைத்து வரப்பட்ட னர். அவர்கள் பிரபாகரனின் குடும் பத்தவர்கள் அல்லர். அடுத்த கட்ட மாக மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் அழைத்து வரப்படவுள்ளனர். பிரபாகரனின் பெற்றோர் இலங்கை வந்துவிட்டனர் என்று ஒரு ஊடகம் வெளியிட்ட புகைப்படத்திலும் எந்த உண்மையும் இல்லை.

- இவ்வாறு அந்த அதிகாரி கூறி னார். (ஐ)

## ...னமே' நாடகம் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,மே31

கடந்த 46வருடகாலமாக மேடை ...ற்றப்பட்டு வரும் 'மனமே' என்ற ...ங்கள மொழி நாடகம் யாழ். மாவட் ...தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் ...ழமை முதற்தடவையாக மேடை ...ற்றப்படவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்றத் ...ன் ஏற்பாட்டில் மேடையேறவுள்ள ...ந்த நாடகத்தில் பங்கேற்கும் சுமார் ... சிங்கள நாடகக் கலைஞர்கள் ...ன்று மாலை யாழ்ப்பாணம் வரவுள் ...னர்.

சிங்கள நவீன அரங்கின் தந்தை ...ன அழைக்கப்படும் காலஞ்சென்ற ...ராசிரியர் எதிர்வீர சரச்சந்திராவின் ...யாரிப்பில் 1956ஆம் ஆண்டு இந்த ...டகம் முதற்தடவையாக மேடை ...ற்றப்பட்டது.

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் ...கமும் ...ரங்கியலும் என்ற பா... சிங் ...ள நாடக வரலாற்றை ...நெறி ...கக் கொண்ட மாண...ங்கும் ...லை ஆர்வலர்களுக்கும் ... ...டைய ...க இந்த நாடகம் அ...ந்துள்ளது.

இந்த நாடகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அரங்கில் காலை 10.30 மணிக்கு முதலாவது காட்சியும் பிற்பகல் 2.30 மணிக்கு இரண்டாவது காட்சியும் மேடையேற்றப்படவுள் ளன.

எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 6.45 மணிக்கு யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் மூன்றாவது தடவையாக மேடையேற் றப்படவுள்ளது.

இந்த நாடகக் குழுவினர் எதிர் வரும் 5ஆம் திகதி மீண்டும் தென் பகுதிக்கு செல்லவுள்ளனர். (ஐ-6)

## இன்று வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்மாநகரசபையின் ஸ்தல ஸ்தா பன தொழிலாளர்கள் இன்று வெள் ளிக்கிழமை வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித் துள்ளனர். (ஐ-10)

# பாடசாலைகளிலிருந்து படையினர் விரைவிலேயே வெளியேறிவிடுவர்

## யாழ்.வந்த கல்வி அமைச்சர் தெரிவிப்பு

குருநகர்,மே31

யாழ்ப்பாணத்தில் 20 பாடசாலை களில் படையினர் தங்கியுள்ளார்கள். அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந் தத்திற்கிணங்க இப்பாடசாலைகளில் உள்ள இராணுவத்தினர் வெளியேறி அவை மாணவர்களின் கல்விச் செயற் பாடுகளுக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந் துள்ள பாடசாலைக் கல்வி அமைச் சர் சுரநிமல் ராஜபக்ஷ நேற்றுப் பிற பகல் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கான கணனி, தொலைக்காட்சி, விஞ்ஞா னப் புத்தகங்கள் ஒப்படைக்கும் நிகழ் வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போது இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் க.சண் முகலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல் ராஜபக்ஷ தமதுரையில் தெரி வித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் 504 பாடசா லைகள் உள்ளன. இவற்றுள் 421 பாடசாலைகளே இயங்குகின்றன. 74 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 20 பாடசாலைகளில் படையினர் தங்கி யுள்ளனர். மூடப்பட்டுள்ள இப்பாடசா லைகள் யுத்தம் காரணமாகச் சேதம டைந்துள்ளன. மக்கள் இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளார்கள். இப் பாடசாலைகளை அபிவிருத்தி செய் வதற்கு வெளிநாட்டு உதவிகள் வழங் கப்படும்.

பாடசாலைகளில் தொண்டர் ஆசி ரியர்களாக பலர் கடமை புரிகிறார் கள். அரசின் சட்ட திட்டங்களுக்கு இணங்க சிலர் பணிபுரிகிறார்கள். பல ஆசிரியர்கள் அங்கீகாரம் பெறாம லேயே சேவை புரிகிறார்கள். அவர்க ளது கல்வித்தகைமைகள் பற்றி பல பிரச்சினைகள் உள்ளன. இவர்கள் பற்றிய தெளிவான முடிவை எதிர்வரும் வாரமளவில் கல்விச் சேவை ஆணைக குழு எடுக்கவுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் இதுவரை வழங் கப்படவில்லை. பல லட்சம் ரூபா நிதி நெருக்கடி மாகாண சபைக்கு உள் ளது. வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு 120 மில்லியன் ரூபாவை அரசு வழங்கவுள்ளது. இந்த நிதி மூலம் ஆசிரியர்களுக்கான இச்சம்பள நிலு வைகளை அரசு வழங்க இதிலிருந்து நிதி ஒதுக்கப்படும். அரசுக்கு நிதி நெருக்கடி உள்ளபோதிலும் பிரதமர் இந்நிலுவையை வழங்குவதற்குரிய நிதியை ஒதுக்க உள்ளார்.

யுத்தம் ஓய்ந்துவிட்டது. சமாதா னம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. நாம அனைவரும் ஒன்றிணைந்து மாணவர் கள் கல்விக்கு எம்மை அர்ப்பணிப் போம் - என்றார்.

தென்பகுதியிலும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து வருகை தந்த கல்வி உயர் அதிகாரிகளுடன் இந்துக் கலாசார அமைச்சர் தி.மகேஸ் வரன், யாழ்.நாடாளுமன்ற உறுப்பி னர் எஸ்.சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 64 பாட சாலைகளுக்கு ஆங்கில மொழிமூல விஞ்ஞான புத்தகங்களும் 21 பாட சாலைகளுக்கு கணனிகளும், இரண்டு பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளும் அமைச்சரின் விஜயத்தை ஒட்டி நேற்று வழங்கப்பட்டன. (ஐ-51)

## நவாலியில் நாடகம்

நவாலி சென்பீட்டர்ஸ் தேவால யத்துக்கு முன்பாக உள்ள முருகன் ஆலய முன்றிலில் இன்று மாலை 6 மணிக்கு சமாதானத்துக்கான வன்னி கலாசார குழுவினரின் 'கரை தேடும் ஓடங்கள்' நாடகம் மேடை யேற்றப்படவிருக்கின்றது.

அங்கு இடம்பெறும் கருத்தரங் கில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் கள் உரையாற்றுவர். (ஐ-3)

மாபெரும் பரிசுப்போட்டி...!
குவைத் விமான சேவை
நிறுவனமும்...
உங்கள் அபிமான உதயன்
நாளிதழும் இணைந்து நடத்தும்...
அற்புதமான பரிசுத் திட்டம்!
உங்கள் பொதுஅறிவுக்கு ஒரு பரீட்சைக் களம்...!
நாள்தோறும்
உங்கள் 'உதயனை' ஊன்றிப் படியுங்கள்!!
விவரங்கள் விரைவில்...!!
(சி22350)

உங்கள்
Computer College
கணனிக் கல்லூரி
Center for Computer Studies
337, Kasthuriyar Road, Jaffna
Tele phone & Fax : 021 - 3497
E - Mail : collegeofcom@bharatmal.com
குறூப்
உங்களுக்காக, உங்களுடன்.....
இன்று முதல் வலிகாமத்திலும்
College Of Computer
கணனியியல் கல்லூரி
Institute of Computer Studies
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

# காஷ்மீரில் பொலீஸ் முகாம் மீது தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல்!

## இதனால் பதற்றம் அதிகரிப்பு

புதுடில்லி,மே31

இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில் பொலீஸ் முகாம் ஒன்றைத் தீவிரவாதிகள் தாக்கியதில் மூன்று பொலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

ஜம்முவில் இருந்து 188 கிலோ மீற்றர்கள் வடகிழக்கே உள்ள டோடா மலைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.



இந்திய எல்லையை நோக்கிச் செல்லும் பாகிஸ்தானிய இராணுவம்

பாதுகாப்புத்துறை அலுவலகங்களும், பொலீஸாரின் தங்குமிடங்களும் அமைந்துள்ள இந்த முகாமை திடீரெனச் சூழ்ந்த தீவிரவாதிகள் கையெறிகுண்டுகள், சிறிய ரக மோட்டார்க் குண்டுகள் மற்றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்டதாகவும் -

பொலீஸார் பதில் தாக்குதல் நடத்தியதை அடுத்து மோதல் சில மணித்தியாலங்கள் தொடர்ந்ததாகவும் -

பின்னர் தீவிரவாதிகள் அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே இஸ்லாமியத் தீவிரவாதிகள் குறித்த விடயத்தில் போர்ப் பதற்றம் உருவாகியுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் இந்திய, பாகிஸ்தானியப் படைகள் பரஸ்பரம் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் மேலும் தீவிரமடைந்துள்ளன. மோட்டார்கள் மற்றும் கனரக ஷெல்களை இரு தரப்பும் பயன்படுத்தி வருகின்றன.

இத்தாக்குதல்களைத் தடுப்பதில் இருநாட்டுத் தலைவர்களும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்திவருகிறது.


அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ரிச்சேர்ட் பௌச்சர் கூறுகையில், பதற்றத்தை உருவாக்கும் பொறுப்பற்ற சக்திகள் குறித்து இரு தலைவர்களும் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று தெரிவித்தார்.

பாகிஸ்தானியப் பிரதேசம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் தீவிர நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் பௌச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக இரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் வெளிவிவகாரச் செயலர் ஜக்ஸ்ரோ, பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு பக்க பலமாக பிரிட்டன் இருக்கும் என்றும-

பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பிடம் இருந்து வெறும் வார்த்தைகளை அன்றி செயல்களையே சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதாகவும் - கூறியுள்ளார்.

(ஒ)




அமெரிக்காவில் விமானத் தற்கொலைத் தாக்குதலில் தகர்ந்து விழுந்த உலக வர்த்தக மையக் கட்டடத்தில் மிச்சமிருந்த கடைசித் தூணும் கடந்த செவ்வாய்க்கிழமை அகற்றப்பட்டது. இது குறித்து சிறிய நிகழ்வொன்றும் அங்கு நடத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் கடைசித் தூணில் பொருத்தப்பட்டிருந்த அமெரிக்கத் தேசியக் கொடியை பணியாளர் ஒருவர் அகற்றுவதைப் படத்தில் காணலாம். வானளாவ நின்ற உலக வர்த்தக மையக் கட்டடம் [illegible] வாரத்துடன் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும்

# பலஸ்தீன அரசமைப்பை அங்கீகரித்தார் அரபாத்!

லண்டன்,மே31

தனது அதிகாரங்களை வரையறைக்குட்படுத்தும் அரசமைப்புச் சட்ட வரைவை அங்கீகரித்து பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் கையெழுத்திட்டார்.

பலஸ்தீன சட்ட சபை உறுப்பினர்கள் 5 ஆண்டுகளின் முன்னர் அங்கீகரித்த பலஸ்தீன அடிப்படைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரபாத் மெத்தனம் காட்டிவந்தார். ஏனெனில் அதிபர் என்ற வகையில் அந்தச் சட்டம் அரபாத்தின் அதிகாரங்களை வரையறுத்திருந்தது.

ஆனால், சமீபகாலமாக அரசியல் மறுசீரமைப்பு வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கம வகிக்கும் அமைப்புகள் அரபாத் மீது அழுத்தங்களை பிரயோகித்து வந்தன. இத்தகைய அழுத்தங்கள் அதிகரித்தமையே புதிய அரசமைப்பை அங்கீகரித்து அரபாத் கையெழுத்திடக் காரணம் எனக் கருதப்படுகிறது.

பலஸ்தீன அடிப்படைச் சட்டம், அதிகாரப் பிரிவுகள் மற்றும் பலஸ்தீனக் குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை விரிவாக உள்ளடக்கிய அரசமைப்பை உருவாக்க வலியுறுத்துகிறது. இதனால் இந்த அடிப்படைச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்படி யஸர் அரபாத்தை பலஸ்தீன சட்ட சபை உறுப்பினர்கள் கோரி வந்தனர். இந்த நிலையிலேயே எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அரபாத் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியுள்ளார்.

அரபாத் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபையில் ஊழலும், திறமையின்மையும் மலிந்து விட்டதாக பெரும்பாலான பலஸ்தீனர்கள் எண்ணுவதாகவும் -

கடந்த ஆறு வாரகாலமாக பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் இந்த எண்ணம் கோபமாக பலஸ்தீனர்களிடம் வெடித்திருப்பதாகவும் -

ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையிலிருந்து தமமை பாதுகாக்கவோ அல்லது தமக்கு உதவவோ பலஸ்தீன அதிகாரசபை தவறிவிட்டதால், அதில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று பலஸ்தீனர்கள் கருதுவதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், பலஸ்தீனத்தில் தனக்கிருந்த தன்னிகரற்ற அதிகார பலத்தை யஸீர் அரபாத் படிப்படியாக இழந்து வருவதை உணரக் கூடியதாக உள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (ஒ)



ஆதரவாளர்கள் மத்தியில் யஸீர் அரபாத்

# கருணைக் கொலை புரிந்ததாக ஹங்கேரியில் தாதி மீது வழக்கு

பெடாபெஸ்ட்,மே31

ஹங்கேரியில் நோயாளிகளை கருணைக் கொலை செய்ததாக பெண் மருத்துவ தாதி ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பெடாபெஸ்ட் நகரின் 'குயுலா நைரோ' மருத்துவமனையில் மருத்துவத் தாதியாகப் பணியாற்றிய டிமியா பலூடி (வயது 25) என்பவரே குற்றஞ் சாட்டப்பட்டவராவார்.

இவர் கடமையாற்றிய 'வார்ட்'டில் மட்டும் நாற்பதுக்கு மேற்பட்ட முதிய நோயாளிகள் இறந்து போனார்கள். பலூடி பணியில் இருந்த போதே இந்த மரணங்கள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்தே பலூடியை பொலீஸார் கைது செய்தனர். அப்போது 8 பேரை மட்டுமே தான் கருணைக் கொலை செய்ததாக அவர் தெரிவித்தார்.

ஹங்கேரியில் கருணைக் கொலை அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே பலூடி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்க ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

(ஒ)

## மகாராணி பாடுகிறார்

லண்டன்,மே31

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் முடிசூடி 50 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி 50 கோடி ரூபா செலவில் இடம்பெறும் பொன்விழா நிகழ்ச்சியில் பிரபல பாடகர்களுடன் இணைந்து எலிசபெத் மகாராணியும் மேடையில் பாட உள்ளார்.

பக்கிங்காம் அரண்மனையில் இந்த நிகழ்ச்சி இடம்பெறும்.

### உள்நாட்டுப் போரின் பின்னர்

# அல்ஜீரியாவில் நேற்று நாடாளுமன்றத் தேர்தல்

அல்ஜீரியாவில் ஒரு தசாப்தகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர் இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்ற தேர்தலில் நேற்று அந்நாட்டுமக்கள் வாக்களித்தனர். இத்தேர்தலில் 23 கட்சிகளின் வேட்பாளர்களுடன் ஆயிரத்து 266 சுயேட்சைகளும் போட்டியிடுகின்றனர்.

இதேசமயம் பிரதான எதிர்க்கட்சிகள் சில, அரசு தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி வாக்களிப்பை பகிஷ்கரிக்குமாறு கோரியுள்ளன. இதனால் கபிலியா பகுதியில் வாக்களிப்பை மக்கள் பகிஷ்கரித்ததாகக் கூறப்படுகிறது.

அல்ஜீரியாவில் மீண்டும் ஜனநாயகம் சீர்பெறவும், சர்வதேச சமூகத்துடன் நாடு இணைந்து செல்லவும் இத்தேர்தல் வழிவகுக்கும் என்று அதிபர் அப் டெலாஜிஸ் பௌட்பிலிகா கூறினார்.

ஆனால் வாக்களிப்பின் போது வாக்காளர்கள் மிரட்டப்பட்டமை, வாக்குச் சீட்டு மோசடிகள் ஆகியவை இடம்பெற்றதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.




வேட்பாளர்களின் பிரசுரங்களை வாசிக்கும் அல்ஜீரிய மக்கள்.

# 'லொக்கர்பீ' குண்டுவெடிப்புக்கு நஷ்டஈடு வழங்குகிறது லிபியா

லண்டன்,மே31

"லொக்கர்பீ" விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களது குடும்பங்களுக்கு தலா ஒருகோடி டொலர்களை நஷ்டஈடாக வழங்க லிபியா முன்வந்துள்ளதாக பாதிக்கப்பட்டோர் தரப்பின் சட்ட நிறுவனம் தெரிவித்தது.

1988ஆம் ஆண்டு அயர்லாந்தின் 'லொக்கர்பீ' நகருக்கு மேலாகப் பறந்துகொண்டிருந்த பயணிகள் விமானம் ஒன்று நடுவானில் வெடித்துச் சிதறியதில் பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் என 259 பேரும், விமானச் சிதறல்கள் கீழே விழுந்ததில் தரையில் இருந்த 11 பேரும் உயிரிழந்தனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு காரணம் என லிபிய உளவு நிறுவனத்தின் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. அத்துடன் இது தொடர்பாக சில லிபியர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நெதர்லாந்தில் வழக்கு விசாரணையும் நடந்தது.

இந்தக் குண்டுவெடிப்பை அடுத்து லிபியா மீது ஐ.நாவும், அமெரிக்காவும் தடைகளை நடைமுறைப்படுத்தின. அத்துடன் அமெரிக்க அரசு பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் லிபியாவையும் சேர்த்தது.

இது தொடர்பாக லிபியாவுக்கு ஐ.நா. சில நிபந்தனைகளையும் விதித்திருந்தது. 'லொக்கர்பீ' குண்டு

உலக அரங்கில்

வெடிப்புக்கு லிபியா பொறுப்பு ஏற்க வேண்டும், இந்த வழக்குத் தொடர்பாக தெரிந்தவற்றை லிபியா நீதிமன்றத்தில் தெரிவிக்கவேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்பனவே அந்த நிபந்தனைகளாகும்.

இந்த நிலையிலேயே, 'லொக்கர்பீ' விமானக் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாக லிபியா அறிவித்துள்ளது. ஆனால், இந்த நஷ்டஈட்டை பகுதி பகுதியாகவே வழங்கமுடியுமென்று லிபியா கூறியுள்ளது.

நஷ்டஈட்டின் 40 வீதம் ஐ.நா. தடைகள் முற்றாக நீக்கப்பட்ட பின்னரும் -

மேலும் 40 வீதமான தொகை அமெரிக்கத் தடைகள் நீக்கப்பட்ட பின்னரும் -

மிகுதி 20 வீதம் பயங்கரவாத நாடுகள் பட்டியலில் இருந்து லிபியாவின் பெயரை அமெரிக்கா நீக்கிய பின்னரும் -

வழங்கப்படும் என லிபியா குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயத்தில் ஐ.நாவின் கொள்கையையே தான் பின்பற்றப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

லிபியா நஷ்டஈடு வழங்க முன்வந்துள்ளபோதும் குண்டு வெடிப்புக்கு லிபியா இதுவரை பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## லங்கா சிமெந்து துறைமுக ஊழியர் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம்,மே31

லங்கா சிமெந்து துறைமுக ஊழியர்கள் அனைவரையும் இணுவிலில் உள்ள காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு துறைமுக ஊழியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (க)

## மகாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.பல்கலைக்கழக 1999/2000 மற்றும் 2000/2001 மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் புதன்கிழமை முதல் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

மார்ச், ஏப்ரல் மற்றும் ஜூன், ஜூலை மாதங்களுக்கான கொடுப்பனவுகளே வழங்கப்பட்டு வருகின்றன. உரிய மாணவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பு தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## காற்றினால் நேர்ந்த அனர்த்தம்

யாழ்ப்பாணம்,மே31

கடுங் காற்றின் உதைப்பினால் சரிந்து வீழ்ந்த மதிலின் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் றக்கா லேன் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகேஸ்வரன் சுதர்ஸன் (வயது15) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின்போது அதிர்ந்து வெடித்துக் காணப்பட்ட அம்மதிலின் அருகில் கோழிக்கூடு ஒன்றை அமைத்துக் கொண்டிருந்த பொழுதே மதில் இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர், ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே31

அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் நடத்தும் மூதறிஞர் கௌரவிப்பும் பரிசில் வழங்கல் வைபவமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அருட்கவி சீ. விநாசித்தம்பி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படவுள்ளார்.

சங்கத்தால் நடத்தப்பட்ட பேச்சு, பண்ணிசை ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (க-4)

## எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர் மரணமானார்

யாழ்ப்பாணம்,மே31

தனக்குத்தானே தீமூட்டிக் கொண்டதாகத் தெரிவித்து கடந்த 27ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் உடல் முழுவதும் எரிந்த நிலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைகள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் மறுநாள் அங்கு மரணமானார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். செல்வநாயகம் (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மரணவிசாரணையை அடுத்து சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

விசாரணையின்போது இவர் ஒரு மனநோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது. (க-15)

## கைதடிப் பகுதியில் திருட்டு மாடுகள் வெட்டப்படுகின்றன

கைதடி,மே31

கைதடி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையிலே மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

களவாகப் பிடிக்கப்படும் மாடுகளை இரவு வேளைகளில் வெட்டி காலையில் விற்கும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருப்பது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர். (க-13-ரி)

# சைவ சமயம் போதிக்கும் ஆசிரியருக்கு கருத்தரங்கு

## வலய ரீதியாக நடத்த ஏற்பாடு

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் பாடரீதியான கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

வலயரீதியாக நடத்தப்படவுள்ள மேற்படி கருத்தரங்குகளுக்கான ஏற்பாடுகளை யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். சைவ பரிபாலன சபையினர் ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்டுள்ளனர்.

கருத்தரங்கு நடைபெறவுள்ள திகதி, வலயம், பாடசாலை பற்றிய விவரங்கள் வருமாறு:

★ ஜூன் 3ஆம் திகதி, யாழ்.கல்வி வலயம் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

★ ஜூன் 7ஆம் திகதி, வடமராட்சி கல்வி வலயம் - வேலாயுதம் ம.வி.

★ ஜூன் 10ஆம் திகதி, தென்மராட்சி கல்வி வலயம் - யாழ்.இந்துக் கல்லூரி.

★ ஜூன் 12ஆம் திகதி, தீவகக் கல்வி வலயம் - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம. வித்தியாலயம்.

★ ஜூன் 14ஆம் திகதி, வலிகாமம் கல்வி வலயம் - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

தினமும் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் சைவ சமயம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுமென சைவபரிபாலன சபையின பரீட்சைச செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (க-எ)

# கடற்றொழில் உபகரணங்கள் தரை வழியால் வந்துள்ளன

யாழ்ப்பாணம்,மே31

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் கடற்றொழில் உபகரணங்களில் ஒருதொகுதி வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்திற்கு கிடைத்துள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து தரமான வலை, ரெஜிபோம் மிதவை, குளிரூட்டப்பட்ட பெட்டிகள், உணவு பாதுகாப்பு பெட்டிகள் போன்ற உபகரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு வாரமும் இவ்வாறான உபகரணங்களை தரைவழிப் பாதையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-ரி)

# விரைவில் நெசவுப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மே31

நல்லூர் அரசடிச் சந்தியிலுள்ள நெசவாளர் பயிற்சிப் பாடசாலையில் இவ்வாண்டுக்கான புதிய பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த நெசவுப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடகால பயிற்சி நெறியைக் கொண்ட இந்த பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் பயிற்சிக்காலத்தில் ஒரு தொகை ஊக்குவிப்பு பணமும் வழங்கப்படவுள்ளது. (க-4)

# மனிதனின் நெஞ்சத்திலேயே இறைவன் உறைகின்றான்

கடவுள் எங்கே இருக்கின்றார்? இந்த வினாவுக்கு விடை பின்வருமாறு எல்லாம் வரும்.

கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் கோயிலுள் இருக்கிறார். கடவுள் வானில் இருக்கிறார். அவர் விறகில் தீபோல, பாலில் நெய்போல மறைந்திருக்கிறார். இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம். அவற்றுக்கெல்லாம் மேலாக அங்கிங்கெனாத



படி எங்கும் நீக்கமற பரிபூரணனாக விளங்கி அனைத்தையும் இயக்காமல் இயக்கிக்கொண்டிருக்கும் இறைவன் ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் நிறைந்துள்ளான்.

அனைத்து உயிர்களிலும் இறைவன் இயல்பாகப் பொருந்தி உள்ளான் என்பதை திருவாசகம் 'ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாலலோ' என்று எடுத்தியம்பும்.

மானிடப்பிறப்பில் நெஞ்சில் நீங்காது இறைவன் உறைவான் என்பதை 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்பர் மணிவாசகப் பெருமான். 'என்னுள்ளங்கவர் கள்வன்' என்பார் ஞானக் குழந்தை. அக்கள்வன் மூங்கிலை ஒத்த தோளுடையாளோடும் உள்ளத்தில் எழுந்தருளியிருப்பதை இவ்வாறு இசைப்பர். 'வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து என் உளமே புகுந்த அதனால்' என்று நெஞ்சுள் புகுந்ததைப் புலப்படுத்துவார்.

நெஞ்சுள் புகுந்ததும் இன்று நேற்றா? உயிர் உருவம் பெறுவதற்கு முன் அல்லவா நெஞ்சில் குடி கொணடார் என்று வாதவூர் வள்ளல், 'உருத தெரியாக்காலத்தே உள் புகுந்தென் உளம் மன்னிக் கருத்திருத்தி ஊன் புக்கு' என்று அங்கீகரிப்பார்.

கடவுள் நெஞ்சுள் இருந்து நம் செயல்கள் அனைத்தையும் கண்காணித்துக்கொண்டிருக்கிறார் அன்றிச் சும்மா இருக்கவில்லை என்பதனை, 'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிக்கும் புண்ணியன் பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நக்கு நிற்பவர் அவர் தமை நானியே' என்று உணர்ந்து உரைப்பர்.

'சிந்தையுள் சிவமணம் பூத்தது' என்பது திருமந்திரம்.

'சந்திப்பாரவர் சிந்தையுளானை' என்பர் ஆலாலசுந்தரர்.

'என்மனத்துள் உன்னை வைத்தாய். அதனால் நான் எப்பொழுதும் மறவாது உன்னை நினைக்கின்

**ஞானக்கதிர்**

றேன்' என்று திருவெண்ணெய் நல்லூர் பெருமானுக்கு பாடிச் சொல்லுவார் நம்பியாரூரர். 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை வைத்தாய்...' என்பது அது.

'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்பது திருமந்திரம்.

'காயமே கோயிலாக' 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்' என் நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும்-' என்ற அருளாளர்களின் அருள்மொழிகள் எல்லாம் கடவுளை நெஞ்சிடமாக காட்டியவை ஆகும்.

பூசலார் நாயனார் நெஞ்சில் கோயில் அமைத்து வழிபட்டதும் வாயிலார் நாயனார் நெஞ்சிலே பூசித்து வழிபட்டதும் எங்கும் கடவுள் நெஞ்சில் குடி கொண்டிருப்பதற்கு மகுடம் சூடியது போலாகும்.

*- சிவசண்முகவடிவேல்*

ஜப்பான் தென்கொரியா

# உலகக் கிண்ண காற்பந்து

31.05.02 - 30.06.02

2002 FIFA WORLD CUP KOREA JAPAN



இன்றைய முதலாவது ஆட்டத்தில் கலந்துகொள்ளும் பிரான்ஸ் நாட்டு அணி

# இன்னும் ஒருமாதத்துக்கு பெரும் கோலாகலம்தான்!

உலகில் உள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் பெரும் ஆவலோடும் பரபரப்போடும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப்போட்டி இன்று தொடங்குகிறது. அடுத்தமாதம் 30ஆம் திகதி வரை லட்சக்கணக்கானவர்களின் பேச்சாகவும் மூச்சாகவும் இந்தப் போட்டிகளே இருக்கப் போகின்றன. ஜப்பானையும் தென்கொரியாவையும் நோக்கிய அவர்கள் கண்கள் அடிக்கடி இமைப்பதை மறக்கப் போகின்றன.

முன்னைய உலகக்கிண்ணப் போட்டிகள் அனைத்தும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலுமே நடைபெற்று வந்தன. இம்முறைதான் முதல் தடவையாக ஆசியாவில் அவை நடைபெறுகின்றன.

1904ஆம் ஆண்டு பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், ஸ்பெயின், சுவிட்ஸர்லாந்து, சுவீடன் ஆகிய ஆறு நாடுகள் ஒன்றிணைந்து சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனத்தை (FIFA) உருவாக்கி உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடக்கக் காரணமாகின.


இதுவரை நடந்து முடிந்த 16 உலகக் கோப்பைப் போட்டிகளில் பிறேஸில், இத்தாலி, மேற்கு ஜேர்மன், உருகுவே, பிரான்ஸ், பிரிட்டன், ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளே இதுவரை உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன. இவற்றுள் பிறேஸில் அணி நான்கு தடவைகளும் (1958, 1962, 1970, 1994) இத்தாலி மூன்று தடவைகளும் (1934, 1938, 1982) மேற்கு ஜேர்மனி மூன்று தடவைகளும் (1954, 1974, 1990) உருகுவே இருதடவைகளும் (1930, 1950) ஆர்ஜென்ரீனா இரு தடவைகளும் (1978, 1986) பிரான்ஸ், பிரிட்டன் தலா ஒவ்வொரு முறையும் முறையே (1978, 1966) சம்பியன்களாகின.

பிரான்ஸ், உருகுவே, இத்தாலி, மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்து, ஆர்ஜென்ரீனா ஆகிய அணிகளே தமது சொந்த நாடுகளில் நடைபெற்ற போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்ற அணிகளாகும்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஒரு நாட்டு அணி 3 ஆண்டுகள் வெற்றிபெற்றால் அவ்வணிக்கே வெற்றிக் கிண்ணம் சொந்தமாக வழங்கப்படும். அந்த வகையில் மேற்கு ஜேரமனி, இத்தாலி, பிறேஸில் ஆகிய அணிகள் தமது நாட்டுக்கு வெற்றிக் கிண்ணங்களை சொந்தமாக்கியுள்ளன. இப்போதைய போட்டிகளில் ஆர்ஜென்ரீனா அல்லது உருகுவே இறுதியாட்டத்தில் வெற்றிபெறுமாயின் அந்த நாட்டுக்கு கிண்ணம் சொந்தமாகும். உலகப் போட்டியில் ஆட்டங்களைப் போலவே அவற்றில் ஏற்படுத்தப்படும் சாதனைகளும் சுவாரஸ்யமானவையே.

1982ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் 24 நாடுகள் பங்குபற்றி மொத்தம் 146 கோல்கள் போடப்பட்டன. இதுவே இன்றுவரை உலக சாதனையாக உள்ளது. அடுத்ததாக 1994இல் இததாலியில் நடைபெற்ற போட்டியில் 144 கோல்கள் போடப்பட்டன.

ஓர் உலகக் கிண்ணப் போட்டியில் அதிக கோல்கள் போட்ட நாடு என்ற பெருமையை ஹங்கேரி பெற்றுள்ளது. 1954ஆம் அண்டு நடைபெற்ற போட்டியில் அந்த நாடு 27 கோல்களை போட்டிருந்தது. இதே ஆண்டில் பிறேஸில் நாட்டு வீர் ஹரி கைர்சின்ட் தான் கலந்துகொண்ட அனைத்து ஆட்டங்களிலும் கோல் அடிதது சாதனை நிலைநாட்டி இருந்தா. அதுமட்டுமல்லாது இவ்வாண்டே



இன்று ஆரம்பமாகும் உலகக் கிண்ணப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் குறித்து நேற்று நடந்த ஒத்திகையின்போது எடுக்கப்பட்ட படம்.

30 நிமிடங்களுக்குள் 5 கோல் போட்ட சாதனை ஏற்படுத்தப்பட்டது.

1958ஆம் ஆண்டு பிறேஸிலில் நடைபெற்ற போட்டியில் பிரான்ஸ் வீரர் யஸ்ட்பொன்டன் 13 கோல்களை அடித்து அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

**வி.குமார்**

அந்தப் பட்டியலில் அடுத்து உள்ளவர்கள் வருமாறு:-

மேற்கு ஜேர்மனி வீரர் கிறாட் முல்லா - 10 கோல்கள், பிறேஸில் வீரர் எடிமீர், போர்த்துக்கல் வீரர் இசுபியா, போலந்து வீரர் லோட்டோ ஆகியோர் தலா ஒன்பது கோல்கள்.

1966ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து வீரர் றேஸ்ட் அடுத்தடுத்து 3கோல்களை அடித்து சாதனை படைத்தார். உலகக் கிண்ணப போட்டியில் தவறிழைத்த வீரரை சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றும் விதி 1990ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

17ஆவது உலகக்கிண்ணப் போட்டியில் பல நாட்டு அணிகளும் களம் இறங்கி உள்ளன. இவை முன்னைய

(10ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## படையினரின் வீறாப்பு!

வடபகுதிக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்.பி. வீரசேகர நிகழ்த்திய உரை ஒன்று பாதுகாப்புப் படையினரின் மனோபாவம் இன்று எப்படியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் பணிகளுக்காக தீவுப் பகுதிக்குள் செல்லவிடுவது சம்பந்தமான கூட்டம் அது. பல அரசாங்க உயர் அதிகாரிகளும் முக்கியஸ்தர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அவர்கள்முன் தளபதி பேசுகையில் மீன்பிடித் தடை பற்றியும் குறிப்பிட்டார்.

மீன்பிடித் தடை இன்னும் அகற்றப்படவில்லை. என்றாலும், சில கடற்பகுதிகளில் மனிதாபிமான அடிப்படையில் ஒரு சலுகையாக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். நாம் நினைத்தால் மீனவர்களை அறவே கடலில் இறங்கவிடாது தடுத்து நிறுத்தமுடியும். இப்படி அவர் இறுமாப்புடன் வீறாப்பாகப் பேசினார்.

இவருடைய இந்த மனப்பான்மைதான் இராணுவம், விமானப்படை, பொலீஸ், அதிரடிப்படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிடமும் காணப்படுகின்றது. ஆங்காங்கே தினமும் நடைபெற்றுவரும் சம்பவங்கள் அதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

படையினர் தாம் கொம்பு முளைத்தவர்கள், சர்வாதிகாரம் உடையவர்கள் என்ற நினைப்பில் தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு அரசாங்க நடவடிக்கைகள் உந்துசக்திகளாக விளங்குகின்றன.

நிரந்தர யுத்தநிறுத்தம் சம்பந்தமான புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதமின்றி அரசியல் பணிகளுக்காகச் செல்லலாம்.

அதன்படி தீவுப் பகுதிகளுக்குச் சென்ற புலிகள் உள்ளே போகவிடாமல் கடற்படையினரால் தடுக்கப்பட்டார்கள்.

இந்த விடயத்தை புலிகள் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்கள்.

கண்காணிப்புக் குழு அரசாங்கத்திடம் விளக்கம் கேட்டது.

அரசாங்கம் என்ன செய்தது? புலிகள் 12 நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேண்டுமானால் தீவுப் பகுதிகளுக்குள் செல்லலாம் என்று அரசாங்கம் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்து அதைப் புலிகளிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

எங்கெங்கே, எத்தனைபேர், எந்தநேரம், எப்படிச் செல்வது, எப்போது வெளியேறுவது என்பன போன்ற நிபந்தனைகள் அவை.

ஆயுதங்கள், சயனைட் குப்பிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆகியவை இல்லாமல் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவருடன் சேர்ந்து காலை 8 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் - அதுவும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் வாழும் தீவுகளுக்கு மட்டும் - ஒவ்வொரு தீவுக்கும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் - புலிகள் அரசியல் நடவடிக்கைகளுக்காகச் செல்லலாம்.

இவை சில நிபந்தனைகள். இந்த நிபந்தனைகள் ஜனநாயக அரசியல் கோட்பாட்டுக்கு விரோதமானவை, அடிப்படை மனித உரிமைகளை மீறுபவை, புரிந்துணர்வு உடன்படிக்கையையே நையாண்டி செய்யும் விதத்தில் அமைந்தவை.

இந்த நிபந்தனைகளை ஏற்று தீவுப் பகுதிகளுக்குச் செல்ல புலிகள் விரும்புவார்களா? அவர்களை அங்கே போகவிடாமல் தடுப்பதற்கென்றே அரசாங்கம் இப்படியான நிபந்தனை விதித்திருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கமே இப்படிப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கத்துக்கு மாறான நிபந்தனைகளை விதித்தால் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு படையினர் மதிப்பு அளிப்பார்களா?

முப்படைகளுக்கும் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அவர் புலிகளுடன் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்யவில்லை. அதனால் தமக்கும் உடன்படிக்கைக்கும் சம்பந்தமில்லை என்ற கருத்தில் இருப்பவர்கள் படையினர். அரசாங்கமே புலிகளின் தீவுப் பகுதி பிரவேசத்தில் நிபந்தனை விதிக்கும் இப்படியான நிலைப்பாட்டில் இருக்கும்போதும் - மீன்பிடித் தடையை முற்றாக நீக்காமல் இழுத்தடித்துக் கொண்டு செல்லும்போதும் - படையினர் இறுமாப்புக் கொள்வதிலும் வீறாப்பாகப் பேசுவதிலும் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

### யாழ். குடாநாட்டிலிருந்து
## இடம்பெயர்ந்த கூட்டுறவு சங்கங்களை மீண்டும் இணைத்துக்கொள்ள முடிவு

இடம்பெயர்ந்து வன்னியில் இயங்கிய ப.நோ.கூ.சங்கங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள அதே சங்கங்களுடன் இணைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் ப.நோ.கூ.சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டுறவுத்துறை அதிகாரிகள், சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், இயக்குநர் சபை உறுப்பினர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த பொ. இளஞ்சேரன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, முல்லை - கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த விஜிதரன், இசைஅமுதன் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ப.நோ. கூ.சங்கங்களையும் இடம்பெயர்ந்து வன்னியில் இயங்கும் ப.நோ.கூ.சங்கங்களையும் இணைத்து செயற்படுத்துவது குறித்து கூட்டத்தில் நீண்டநேரம் ஆராயப்பட்டது.

இரு இடங்களிலும் இயங்கிய சங்கங்களின் இயக்குநர் சபைகளை உள்ளடக்கியவர்களில் மூவரை இயக்குநர் சபைக்கு தெரிவுசெய்வது என்றும் முடிவுசெய்யப்பட்டது. (ம-3-86)

### நாட்டு நடப்பு

**மாறிவிட்டோம் மந்தியாய்!**

*ஓலையால் குடிசை வேய்ந்து*
*ஓவியக் கோலம் போட்டு*
*சீலமாய் தமிழ் மரபு பேணி*
*சிறப்புற தர்மம் காத்து*
*ஆலயம் தொழுது நின்று*
*அறநெறி பிறளாது வாழ்ந்தோம்*
*கோலா கலமாய் இன்று*
*குடித்தொன்றாய் நடனமாடி*
*நலம் பெறு உடு புடைவை மாற்றி*
*நற் தமிழ் பண்பை விற்று*
*உலகெல்லாம் வியக்க வாழ்ந்தோர்*
*உலாவினோம் மந்திபோல.*

*- விகடகவி*

### நாளையும் நாளைமறுதினமும் நடைபெறும்
# சமாதான நடமாடும் சேவையில் பல சமூக நலன்புரிப் பணிகள்
### பேச்சுக் குறைபாடுடையோருக்கும் மருத்துவ ஆலோசனை

யாழ்ப்பாணம்,மே31

நாளையும் நாளைமறுதினமும் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள சமாதான நடமாடும் சேவையின்போது பேச்சுக் குறைபாடுள்ளவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக் குறைபாடுடையவர்களும் ஓரளவுக்கு தொடர்பாடலில் ஈடுபடக்கூடிய வகையில் தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்களால் இந்த மருத்துவ ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

பல திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளும் இந்த நடமாடும் சேவையில் பொதுமக்களுக்கு மேலும் பல சமூக நலன்புரிப் பணிகள் வழங்கப்படவிருக்கின்றன.

சமூக நலன்புரி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சேவையில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கும் முக்கியமான சேவைகள் வருமாறு:-

★ முதியவர்களுக்கு சில வசதிகள், சலுகைகளை ஏற்படுத்தும் வகையில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. அடையாள அட்டை அளவு 2 புகைப்படங்களுடன் வருபவர்களுக்கு உடனடியாகவே அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ சுயதொழிலில் ஈடுபடும் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு சமூக காப்புறுதி ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தல்.

★ மூக்குக் கண்ணாடிகளைப் பெறத் தகுதியுடைய வறிய மக்கள் 2ஆயிரம் பேருக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கல்.

★ விதவைகள் மற்றும் வலது குறைந்தோருக்கு சுயதொழிலில் ஈடுபடுவதற்கு பண உதவி வழங்கல்.

★ கணவனை இழந்த வறிய பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கல் (தையல் பயிற்சி பெற்ற 60 பேருக்கு வழங்கப்படும்).

★ நடமாட முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் வழங்கல்.

★ செவிப்புல குறைபாடுள்ளவர்களுக்கு காது கேட்கும் கருவி வழங்கல்.

★ பார்வையற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்பு வழங்கல்.

★ வலது குறைந்தவர்களுக்கு (சொந்தக்காணி இருப்பின்) வீடுகட்ட 50 ஆயிரம் ரூபா வீதம் பண உதவி வழங்கல்.

★ தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் 60 பேருக்கு இரு நாள்கள் பயிற்சிப் பட்டறை நடத்துதல் (யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில்).

★ தெரிவுசெய்யப்பட்டு கிராம சேவை உத்தியோகத்தர்கள் நூறுபேருக்கு ஒருநாள் உளவளத்துணைப் பயிற்சி வழங்கல் (வை.எம்.சி.ஏ. மண்டபத்தில்).

★ ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களின் வளர்ச்சி தொடர்பான பயிற்சிப் பட்டறை (யாழ்.போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சி நிலையத்தில்).

இந்த நடமாடும் சேவைக்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டதாகவும் -

இதனை ஆரம்பித்து வைப்பதற்காக சமூக நலன்புரி அமைச்சர் ரவி சமரவீர இன்று காலை இங்கு வந்து சேர்வார் எனவும்-

இந்த சேவையின் நிகழ்ச்சி இணைப்பாளர் வி.சிவனேசன் தெரிவித்தார். (க-4)

### வீடுகளை அத்துமீறி கைப்பற்றியதான
## புளொட்டின் குற்றச்சாட்டை புலிகள் முற்றாக நிராகரிப்பு

வவுனியா,மே31

வவுனியா மாவட்டத்தில் குருமண்காடு, வீரபுரம் பகுதிகளில் உள்ள தமது இரு அலுவலகங்களை விடுதலைப் புலிகள் அத்துமீறி கைப்பற்றியுள்ளதாக புளொட் அமைப்பு தெரிவித்துள்ள முறைப்பாட்டை புலிகள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

குருமண்காட்டில் தமது மாணவர் அமைப்பு இயங்கிய கட்டடத்தையும் -

வீரபுரத்தில் அரசியல்துறை அலுவலகம் இயங்கிய கட்டடத்தையும் -

விடுதலைப் புலிகள் அத்துமீறி கைப்பற்றியுள்ளதாக புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மாவட்டப் பொறுப்பாளர் து.திருப்பதி கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் முறையிட்டார்.

அது பற்றி ஆராய்ந்த கண்காணிப்புக் குழுவினர், அந்த முறைப்பாடு முறைப்படி சமர்ப்பிக்கப்படாதபோதும் முறைப்பாட்டை பதிவு செய்தோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டை விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலவன் முற்றாக மறுத்துள்ளார்.

வீரபுரத்தில் உள்ள புளொட்டின் அரசியல்துறை அலுவலகத்தை அந்த அமைப்பின் பொறுப்பாளர் கில்மன் விரும்பியே எம்மிடம் ஒப்படைத்தார். அதற்கான ஆவணங்களும் எம்மிடம் உண்டு.

புளொட்டின் மாணவர் அமைப்பு அலுவலகம் தொடர்பாகத் எமக்கு எதுவும் தெரியாது - என்று அவர் தெரிவித்தார்.

குருமண்காட்டில் புளொட் அமைப்பின் மாணவர் அமைப்பு இயங்கிய கட்டடத்தின் உரிமையாளர் கருத்து வெளியிடுகையில் -

புளொட் அமைப்பினர் அடாத்தாக இந்தக் கட்டடத்தை வைத்திருந்தனர். தற்சமயம் அந்தக் கட்டடத்தை மீளப்பெற்று வாடகைக்கு வழங்கியுள்ளோம். வாடகைக்குக் கட்டடத்தைப் பெற்றவர்கள் விடுதலைப் புலிகளா அல்லது வேறு எவருமா என்பது எமக்குத் தெரியாது என்று தெரிவித்தார். (ம-3)

### நாளை

வைகாசி 18
சனிக்கிழமை
(01.06.2002)
திதி : ஷஷ்டி
பிற்பகல் 5.19 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
காலை 6.30 வரை
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம்: 08.52 - 10.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பணத்தை இழந்தால் சொற்ப நட்டம்; நேரத்தை இழந்தால் எல்லாமே நட்டம்.

### இந்து இளைஞர் மன்றம் நடத்திய
## சைவசமய அறிவுப்போட்டி முடிவுகள் வெளியாகின

அரியாலை,மே31

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்திய சைவசமய அறிவுப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்: கணநாதன் உஷாந்தன் (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்)

இரண்டாம் இடம்: சச்சிதானந்த. சிவம் வேனிலன்(இணுவில் மத்திய கல்லூரி)

மூன்றாம் இடம்: அருணாச்சலம் சஞ்சீவா(கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க.பாடசாலை)

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்: தருமரத்தினம் ஹரிஹரன்(யாழ்.இந்துக் கல்லூரி)

இரண்டாம் இடம்: பத்மராஜா பத்மநாபா(கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), நிரோஜினி பாலகிருஷ்ணக் குருக்கள்.

**மேற்பிரிவு**

முதலாம் இடம்: ஆனந்தசுந்தரம் ஹரிஹரன்(கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்)

இரண்டாம் இடம்: கௌரி சிவானந்தன்(கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)

மூன்றாம் இடம்: வி.அபர்னா(அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை)

**அதிமேற்பிரிவு**

முதலாம் இடம்: கார்த்திகேசு ரிஷிகேசன்
குகதாசன் மதுமதி

மூன்றாம் இடம்: கார்திகேசு கஸ்தூரி

ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு சிறப்புப் பரிசுகளும் 165 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-17)

உ

## யாழ்ப்பாணம், புங்கங்குளம்

# வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

# ஆலய வருடாந்த பொங்கல் விழா சிறப்பிதழ்

**31.05.2002**

# வில்வையம்பதியில் எழுந்தருளி வினை தீர்க்கும் அன்னை!


பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ்.குடா நாட்டுக்கு பல பாகங்களிலும் திலகமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள் காரணமாகப் பல திருத்தலங்களின் திருவிழாக்களும் பூசைகளும் வேறு வேறு இடங்கவில் நடைபெற்றதும் அடியார்களின் நேர்த்திக் கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்பட்டதும் நம் பிரதேச வழக்கமாகியிருந்தது.

### அம்பாளின் அருட்பார்வை

இந்த வகையிலே யாழ்.குடாநாட்டின் புங்கங்குளப் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியே ஆகும். ஆனால், இந்த அம்மனின் புங்கங்குள அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இற்றைக்கு சுமார் 36 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

### அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு, அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புகள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தட



**வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை**
**அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை**
**பொல்லா வினையகல புங்கங்குளத்தூர் புகுந்து**
**கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்!**

வைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்கமுற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ்.நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்வை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிகமிக மேலோங்கி உள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

### தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிவசநிலை, அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம், அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோசங்கள் நீங்கிவிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

### நம்பியே கைதொழுவோம்

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ்.நகரின் புங்கங்குளம் பகுதியிலே வில்வையடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்பெருந்தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக

*'மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்'*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே!
நம்பியே கை தொழுவார்க்கு பிணி நீங்கிடுமே!!


கட்டடப் பொருள்கள், உழவு இயந்திர லாண்ட்மாஸ்ரர் உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்கள்
**கே.வைத்திலிங்கம் கொம்பனி**
38, 40, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.2075

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், ரேடியோ, ரீ.வி.டெக் முதலியவற்றை பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**சிவாஸ் சென்ரர்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கோயில்களுக்குத் தேவையான பட்டு, சரிகைத் துணிகள், பட்டுவேட்டிகள், சால்வைகள் மற்றும் நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்:
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல் 22கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம் மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறி நதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

துவிச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் தரமான நவீன அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றுக்கு நாடுங்கள்:
**கயன் ரேட்ஸ்**
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரமான நல்லபொருள்களை நீங்கள் நயமாக வாங்கிக்கொள்ள நாடுங்கள்:
**புதிய முருகன் வணிக நிலையம் (நியூ முருகன் ரேடர்ஸ்)**
58P, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
*உரிமையாளர்:* க.முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க ஆபரணங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:
**அலங்கார் நகை மாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191 (343), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குளிர்ப்பானம் தயாரிக்கும் தரமான பொருள்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
161, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2219

நவீன டிசைன்களிலான, நாகரிகத்துக்கேற்ற தங்கப் பவுண் நகைகளை நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**சானுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். T.P.: 3700

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. : 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகை மாளிகை**
116V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்:
**சிறி அமலா நகை மாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின் உபகரணங்கள், மின்சாரப்பொருள்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
62/31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/22333)


# யோகமார்க்கம் மூலம் பிறவிப்பயனை எய்த வழிகாட்டும் சிதானந்த சரஸ்வதி

சுவாமி சிதானந்த சரஸ்வதி யோகியாரின் மகத்தான சாதனைகள் இன்று 31-05-2002இல் சுவாமி சிதானந்த சரஸ்வதி யோகியாரின் தொணணூறாவது பிறந்தநாள். அன்னாரின் இந்த நிகழ்வை அவருடைய சீடர்கள கஞதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்தில் கொண்டாட உள்ளனர்.

யோகாசனக் கலையைப் பெருமைப்படுத்த பிறவி எடுத்த யோகியாரின் இயற்பெயர் காசிப்பிள்ளை. பிறந்த இடம் கல்முனைக்கு அனித்தாயுள்ள பாண்டிருப்பு. மனவலிமை பெறுவதற்கு உடல் உறுதி வேண்டற்பாலது. மனம் வலிமை உற்றால் அகத்தின் ஆற்றல்களை வெளிக் கொணரலாம். இந்த மார்க்கத்தின் மூலம் பிறவிப் பயனை எய்தலாம் என உணர்ந்த சுவாமிகள் ஆரம்பத்

**இன்று அவருக்கு 90ஆவது பிறந்தநாள்**

தில் சிலம்படி போன்ற கலைகளில் கவனம் செலுத்தினார். அதன் பின்னா யோகாசனக் கலை அவரை ஈர்த்தது. யோகாச்சார்யா பெங்களூர் சுந்தரத்தின் ஆனந்த ரகசியம், கடப்பை சச்சிதானந்த யோகீஸ்வரரின் ஜீவப் பிரமைக்கிய வேதாந்த ரகசியம் போன்ற நூல்கள் சுவாமிகளைக்



கவர்ந்தன. அந்நூல்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி யோகாசனம், பிரணாயாமம் போன்றவற்றைப் பயின்றார். கடப்பை சச்சிதானந்தரை மான சீகக் குருவாகக் கொண்டு பெரிதும் முன்னேற்றம் கண்டார். பின்னர் இந்தியா சென்ற யோகியார் கடப்பை சச்சிதானந்தா சமாதி எய்தியமையால் அவருடைய தலைமைச் சீடர் சிவயோக பசவலிங்க சுவாமிகளிடம் யோகாசனக் கலையை நன்கு பயின்று அவரிடம் யோக தீட்சை பெற்றார்.

ஈழம் திரும்பிய யோகியார், தாயாரின் விருப்பத்திற்கமைய திருமண பந்தத்தில் ஈடுபட்டாலும் யோகாசனக் கலையே அவரைப் பெரிதும் ஈர்த்தது. தன் தலையாய கடமை யோகாசனக் கலையை மக்கள் மத்தியிற் பரப்புவதே என உணர்ந்த அவர் மாத தளை முத்துமாரியம்மன் ஆலயம், யாழ்ப்பாணம் நல்லை ஆதீனம், திவ்விய ஜீவன சங்கம் போன்ற இடங்களில் யோகாசன வகுப்புகளை நடத்தினார்; பலரை யோகாசனக் கலையில் தேர்ச்சியுறச் செய்தார். கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றிய உடற்பயிற்சி ஆசிரியர்களுககும் யோகாசனக் கலையைப் புகட்டினார்.

நான்காவது தடவையாக இந்தியா சென்ற யோகியார், ரிஷிகேசத்தில் இமயஜோதி சுவாமி சிவானந்தரின் சீடர் சுவாமி சிதானந்த சரஸ்வதியிடம் ஞான தீட்சை பெற்றார்.

தன் சொந்த இடமான பாண்டிருப்பில் ஆச்சிரமம் அமைத்து, யோகாசனம் பயிற்றிய பின்னர் தற்பொழுது பலரின் வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பு கஞதாவளையில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் குருகுலத்தில் நிரந்தரமாகத் தங்கி யோகாசனக் கலையைக் குருகுல மாணவர்களுக்கும் வெளி மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கின்றார்.

**சி.கனகசூரியம்**
முகாமையாளர்
திருஞானசம்பந்தர் குருகுலம்
கஞதாவளை.

அதிகாலை நாலுமணிக்கே யோகாசன வகுப்புகள் ஆரம்பமாக குருகுலத்தில் தெய்வீக சூழல் ஏற்படும். யோகியாரிடம் யோகம் பயிலுகின்ற நோயாளிகளின் நோய்கள் அகன்று அவர்கள் சுகதேகியாவது யோகியாரின் திறமைக்கு சான்று பகர்கின்றது. உண்மையிலேயே யோகியாரின் சாதனைகள் மகத்தானவை.

அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து யோகாசனக் கலையைப் பயிற்றி மக்களின் சுகவாழ்விற்கு வழியமைக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். ★


## ஜே.கே அரங்கள்



இன்ஜினியர்கள் பாவிக்கின்ற. பெறுமதிக்கு பொருத்தமான. ஜே.கே அரங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

ஜெனரல் எக்கியுப்மன்ட்ஸ் லிமிடெட்
316 & 400 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு-12.
போன்: 345046, 327264, 343822, 430799 பெக்ஸ்: 434637


## கனேடியத் தூதர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

கிளிநொச்சி,மே31

இன்றைய அரசியல் நிலை குறித்து கனேடியத் தூதர் செல்விரூத் ஆட்சிபோல் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது நோர்வேயின் சமாதான முயற்சி, புரிந்துணர்வு உடன்பாட்டின் அமுலாக்கம், தாய்லாந்துப் பேச்சு ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டன.

அதனையடுத்து எம்.எஸ்.எவ். வைத்திய குழுவினரையும் தூதர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு விஜயம் செய்த தூதர் அதன் செயற்பாடுகளையும் பார்வையிட்டார்.

தூதருடன் தூதரக அதிகாரிகளான போல் ஜெனி, யூட் வில்லியம் ஆகியோரும் வந்திருந்தனர்.(ம-3-4)

## சட்டமாணி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மே31

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணி கற்கைநெறிப் பரீட்சைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு செங்குந்த இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் பரீட்சை நிலையம் யாழ். மத்திய கல்லூரி என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதும் பரீட்சைகள் செங்குநத இந்துக்கல்லூரியிலேயே நடைபெறும் என்று பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் பிராந்திய நிலையத்தில் தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் சிலருக்கு அனுமதி அட்டைகள் வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10-ரி)

## பதவி வெற்றிடம்

**காரைநகர் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**(வரையறுக்கப்பட்டது)**

### பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**பொது முகாமையாளர்:**

**சம்பள அளவுத்திட்டம்:** 165/88-09 3200-5200
90X10 - 110X10
(31/97 சுற்றுநிருபத்திற்கு அமைய)

**தகைமைகள்:**

அ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேல் மட்டத்தில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 11ஆவது சம்பளத் திட்டத்தில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதியுடன் அங்கீகரிக்கப்பட்ட பாணி/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ பதவிகளில் 2 ஆண்டுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர் தேசி முகாமைத்துவ பத்திரம்/க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிற்குக் குறையாத சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட பாணி/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**வயதெல்லை: 21-45 வருடங்கள்**

தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பத்தைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பத்தை அனுப்புதல், விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து, "தலைவர், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர்" என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 15.06.2002ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்,
பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
*காரைநகர்.* (C/22334)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 08 - 11 - 1931



*மறைவு* 21 - 05 - 1992

### அமரர் க.லம்போதரன்

(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

திதி: 31.05.2002

.விநாயகப் பெருமானையும் வீரபத்திரரையும் சிந்தையிலிருத்தி
நேர்மையையும் உண்மையையும் தெய்வ வழிபாடு என நம்பி
வாழ்ந்த உத்தமர் என்றும் எங்கள்
காவல் தெய்வமாய் இருக்கப் பிரார்த்திக்கும்:

- குடும்பம்.

*மீசாலை.* (4009) *126/4, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.*

## யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

### தரம் I இற்கான அனுமதி - 2003

மேற்படி விண்ணப்பப் படிவங்களை பெற்றோர் காரியாலயத்தில் பாடசாலை நேரத்தில் பெற்று 30.06.2002இற்கு முன்னதான விண்ணப்பங்களை ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(C/22323) அதிபர்.

## B.A. PART I / B.A. PART II — விரிவுரைகள் ஆரம்பம் 01.06.2002

1st In Com., G.A.Q. யாழ்ப்பாணம் / பேராதனை பல்கலைக்கழகங்களினால் இவற்றுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன. இப்பதிவினை மேற்கொள்ள A/L இல கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் இவற்றுள் மூன்று பாடம் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் தகுதியுடையவர்களாவர்.

1. இவற்றுக்கான பதிவுகள்யாவும் எமது நிறுவனத்தினால் செய்துதரப்படும்.
2. இவற்றுக்கான விரிவுரைகள் ஆரம்பம்:01.06.2002.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி
S.அருள்நங்கை. (4269)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 17 - 11 - 1925



அரன் அடியில் 10 - 06 - 2001

### அமரர் வயித்திலிங்கம் குமாரசிங்கம்

*(முன்னாள் பொலீஸ் பரிசோதகர்)*

திதி: (சதுர்த்தி) 31.05.2002

எங்களுக்கு விளக்காய் ஒளிகாட்டிய அன்பு அப்பாவே!
எங்கள் வாழ்விற்கு ஆதாரமாய் இருந்து
எங்களை வழிநடத்திச் சென்ற - அப்பாவே!
எங்களைப் பிரிந்து ஓர் ஆண்டு உருண்டோடினாலும்
எம் நினைவுகள் இருக்கும் வரையில்
உங்கள் நினைவுகள் அழியாது.
தெய்வமாய் இருந்து எங்களைக் காத்தருளுங்கள்.

*என்றும் உங்கள் நினைவுடன்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உடுவில் வீதி, மானிப்பாய்.* (4316)

## ஐந்தாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 01 - 02 - 1964



உதிர்வு 31 - 05 - 1997

### அமரர் சிவகுரு யோகராசா

பேராலை, பளை (மின் ஊழியர், பிரதேச சபை, பளை)

நீங்காத நினைவுடன்
கு.குணரூபன்

தற்காலிக முகவரி:
*ஸ்ரேசன் றோட், பளை.*
*உசன், மிருசுவில்.*

(4234)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4171)

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய், பொன்னாலை வீதியில் 8 பரப்பு, 18 பரப்புக்காணி சம துண்டுகளாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சுதாகரன், 40/3, புகையிரதப்பாதை கிழக்கு ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம்; மது, டச் வீதி, சண்டிலிப்பாய். (4265)

ஒஸ்ரின் கேம்பிறிஜ் A60 (ஒக்ஸ் போட் மொடல் நல்ல நிலையில் உளளது) விற்பனைக்கு உண்டு. புதுக் கோயிலடி, கல்லூரி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (4339)

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கி.சேந்தன், 15/23, மாரியம்மன் வீதி (முருகேசன் வளவு), திருநெல்வேலி. (4334)

கோல்ட் விஷ் மீன்கள், கலிக்கோ மீன்கள், மீன்தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 35/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.(4322)

விமானம் மூலம் பெறப்பட்ட ஆரோக்கியமான, முதல் தரமான சேலான் இன, புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, ஆனைப் பந்தியடி, யாழ்ப்பாணம். (4313)

எம்மிடம் கலர் T.V. 21 இஞ்சி, ... 100w நீட்டுக் ..., யூனிட்டுக்கள், ஏயர் மைக் ... விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆசிரியர் குணம், மானிப்பாய் வீதி, தாவடி. தொலைபேசி இல.2690 (4343)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் வாகனப் போக்குவரத்து வசதியும், மின்சாரம், தனிக்கிணறு, மலசலகூடம் போன்ற வசதியுமுடைய 1 1/2 பரப்புக்காணி (4 அறைகளும் Hall க்குரிய அத்திவாரத்துடன்) விற்பனைக்கு உண்டு. Survey Plan முதலிய விவரங்களுக்கு: க.அம்பிகைபாகர், 38, சிவன கோவில் றோட், திருநெல்வேலி தெற்கு. (4336)

### FOR SALE

**Life long collection of used Ceylon and foreign stamps, first day covers, in bulk quantity for sale. Contact: K.Ampalavanar, Aitkenson Road, Vaddu South West, Vaddukoddai.** (4338)

### பெயர் பொறித்தல்

உங்கள் இல்லங்களுக்கு வந்து எவர்சில்வர் பாத்திரங்களுக்குப் பெயர பொறித்துக் கொடுக்கப்படும். ஒருசொல்லுக்கு ஒரு ரூபா மட்டுமே. தொடர்பு: லெ.சக்திவேல், 132, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (4304)

### தவறிவிட்டது

கடந்த 23-05-2002 வியாழக் கிழமை 751ஆம் இலக்க யாழ்.-பருத்தித்துறை பஸ்சில் 'இயர்போன்' ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வு.வேலாயுதம், தேசிக்காய் வியாபாரி, புலோலி மேற்கு, பருத்தித்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்தால சன்மானம் வழங்கப்படும். (4311)

162, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆ.யோகராஜா என்பவருடைய M.D. 90 மோட்டார் சைக்கிளின் NPGE - 7381 இலக்கத்தகடு முகமாலைக்கும் பளைக்கும் இடையில் 29-05-2002 புதன்கிழமை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4329)

18/3, பூமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த செல்லர் பாலசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.410703157V), விசேட அடையாள அட்டை என்பன பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நல்லூர், முத்தி ரைச்சந்தி செம்மணி வீதியிலுள்ள பரி.யாக்கோபு ஆலயத்தில் ஒப்படைத்துதவவும். (4327)

### வகுப்புகள்

ஆங்கிலத்தில்(உயர்கல்வி),O/L பரீட்சையில் A.B.C. பெறுபேறடையவும் ஆண்டு 9, 10 உட்பட A/L, G.A.Q. ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். அனுபவமுள்ள B.Sc. (Cey.) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (4306)

### விற்பனைக்கு

புத்தம் புதிய CBZ HERO HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
15. கைலாசபிள்ளையார் கோயில் வீதி. நல்லூர். (4320)

## புறக்கோட்டையில் 4 லட்சம் ரூபா அபகரிப்பு

கொழும்பு,மே31

புறக்கோட்டையில் நேற்று முன்தினம் வர்த்தகர் ஒருவரின் 4 லட்சம் ரூபா அபகரிக்கப்பட்டது. நான்காம் குறுக்குத்தெருவில் இச்சம்பவம் நடைபெற்றது. நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த இவ்வர்த்தகர் 7 லட்ச ரூபாவுடன் வான் ஒன்றில் நேற்று முன்தினம் காலை புறக்கோட்டைக்கு வந்தார். மூன்று லட்சம் ரூபாவை கையில் எடுத்துக் கொண்டு 4 லட்சம் ரூபா கொண்ட பையை வானில் விட்டு விட்டு அவர் கடை ஒன்றுக்குச் சென்றிருக்கிறார்.

அச்சமயம் அருகே வீதியில் நின்ற நால்வர் வானில் இருந்த பணப் பையை எடுத்துக் கொண்டு கம்பி நீட்டினர்.

வர்த்தகரின் முறைப்பாட்டை அடுத்து புறக்கோட்டைப் பொலீஸார் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (க)

## நன்றித் திருப்பலி

மட்டுவில் வடக்கு, ஆரோக்கிய வாச வைத்தியசாலை உரிமையாளா

### வைத்திய கலாநிதி பேதுரு பிலிப்ஸ்

அவர்களுக்கு ஸ்ரீலங்கா அரசினால் **"சகஸ்றாபிஷேக வைத்திய சிகாமணி"** என்னும் கௌரவப் பட்டத்தினை தங்கப்பதக்கத்துடன் வழங்கிக் கௌரவித்தமைக்காக, நாளை(01.06.2002) சனிக்கிழமை மாலை4 மணிக்கு நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் அருட்தந்தை ***அ.லோரன்ஸ்*** அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்படும் . நன்றித் திருப்பலியில் எம் குடும்பத்தாருடன் இணைந்து மகிழுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துக்களை பலவழிகளிலும் வழங்கிய அருட்தந்தையர்கள், அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துககொள்கின்றோம்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (C/22337)
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### கலைப்பீடப் பரீட்சைகள் கல்வியாண்டு 2001/2002

**கலைப்பீடத்தின் பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவர்களிடமிருந்து 10-06-2002 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

1. முதலாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்)
2. இரண்டாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்)
3. மூன்றாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்: சித்திரமும் வடிவமைப்பும்)
4. சிறப்புக்கலைத்தேர்வு பகுதி III
5. பொதுக்கலைத்தேர்வு பகுதி I / சிறப்புக்கலைத் தேர்வு பகுதி I (மீள் பரீட்சைகள்)
6. பொதுக்கலைத்தேர்வு பகுதி II / சிறப்புக்கலைத் தேர்வு பகுதி II (மீள் பரீட்சைகள்)

**மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு ரூபா 50/வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணபத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை 28.05.2002இல் இருந்து கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உதவிப்பதிவாளர் /கலைப்பீடம் அவர்களிடம் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.**

**பதிவாளர்.**
28.05.2002 (C-22336)

## துயர் பகிர்வு

எமது பாடசாலை உபஅதிபர் **திருமதி லதா கிருபானந்தன்,**
ஆசிரியை **செல்வி ராதா அம்பலவாணர்**
ஆகியோரின் அன்புத் தந்தையார்

### அமரர் அம்பலவாணர்

**அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது துயரத்தை அவரின் குடும்பத்தாருடன் இணைந்து பகிர்கின்றோம்.**

(4341)
**யா/மயிலிட்டி றோ.க.வித். பாடசாலைச் சமூகம்.**

## விற்பனைக்கு

மான்மார்க், சூரியன் மார்க் தட்டு ஓடுகள், முகட்டு ஓடுகள், செங்கல்லு, மரக்கறி, வெங்காயம் பொதிசெய்யும் வலைப்பை (நெற்பை), கயிறு வகை, றெஜிபோம் மட்டைகள், றெஜிபோம் பெட்டிகள், சகல அளவுகளிலும் அலுமினியத் தகடுகளால் செய்யப்பட்ட 7x5 அளவு கண்ணாடி அலுமாரி என்பன விற்பனைக்கு உண்டு.

**ஸ்ரீராம்நாதன் களஞ்சியம்**
213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4342) தொலைபேசி: 2916.

## அகவை அறுபதில் சேவை நலன் பாராட்டு



### திரு. நா.நல்லையா

*(எழுதுவினைஞர், மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பருத்தித்துறை)*

**எனது நண்பன் திரு.நா.நல்லையா அவர்கள் இன்று (2002.05.31) வெள்ளிக்கிழமை 60ஆவது வயது பூர்த்தியாகிக் கடமையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு அவரின் சேவையைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.**

*தவமஹால்,*
*அல்வாய்.* (4345)
ந.துரைராஜா J.P.
*விவாகப் பதிவாளர் (வடமராட்சி)*

## நினைவில் நீங்கா ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 - 07 - 1948



ஆண்டவன் இருப்பிடத்தில 12 - 05 - 2001

### அமரர் குழந்தையன் குணரத்தினம்

திதி: 2002.05.31

**பாசத்தின் உறைவிடமாய்**
**பண்பின் திருவுருவாய்**
**நேசத்தோடெமை அரவணைத்து**
**நேர்வழிகள் காட்டிவைத்தீர்**
**ஆண்டு ஒன்று ஆனபின்பும்**
**தூக்கங்களை தொலைத்துவிட்டு**
**ஏக்கங்களோடு தூண்டில் படு மீனதுவாய்**
**துடிக்கின்றோம் உங்கள் நினைவால்.**

*மடத்தடி,*
*சண்டிலிப்பாய்.* (4340)
*பிரிவால் துயருறும்:*
**மனைவி, மக்கள், மருமக்கள், உறவினர்கள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 - 05 - 1954



உதிர்வு 11 - 06 - 2001

### திருமதி புவனமலர் குலவீரசிங்கம்

திதி:- பஞ்சமி 31. 05. 2002

***பன்னிரு மாதங்கள் பறந்தோடிப் போனாலும்***
***உங்களின் நினைவுகள் மட்டும் அழியாத கோலங்கள்!***
***என்றுதான் எங்கள் உடலை விட்டு உயிர் நீங்குமோ!***
***அன்றுதான் உங்களின் நினைவுகளும் மறையும்.***

*கிழவி தோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு.* (4335)
*பிரிவால் துயருறும்:*
*குடும்பத்தினர்.*

# விமான சேவையில் குவைத் அடையும் பெருமை

கலை, வர்த்தகம் ஆகிய துறைகளிலும் மற்றும் சமுத்திரத்துக்கும் பாலைவனத்துக்குமிடையே ஒரு தேசிய இணைப்பை உருவாக்கும் அதன் கேந்திர அமைவிடம் என்னும் வகையிலும் குவைத் அனைத்துலகம் தழுவிய பிரபலத்தைச் சம்பாதித்துள்ளது. குவைத் என்னும் பெயர் 11ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஹேஜிரா காலப்பகுதியில் தோன்றியது. இது இன்னல்களுக்குள்ளானவர்களின் இறுதிப் புகலிடம் என்னும் கருத்துடைய சுருக்கப் பெயராகும்.

கப்பல்துறைப் பதிவுகளில் காணப்படுவதும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயப் பயணிகள் பயன்படுத்தியதுமான 'அல்-குரெய்ன்'இலும் இவ்வாறு காணப்படுகின்றது.

'அல்-குரெய்ன்' என்பது குன்று அல்லது உயர்ந்த பூமி என்னும் அர்த்தமுடையதாகும்.

1937இல் குவைத்தில் எண்ணெய் கண்டெடுக்கப்பட்டது. புர்க்வான் பகுதியில் குவைத் எண்ணெய் நிறுவனத்தால் அகழ்ந்தெடுக்கப்பட்டு 1946இல் எண்ணெய் முதன்முதலாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஷேர்க் அப்துல்லா அல்சலாம், அல்ஷபாவின் ஆட்சிக்காலத்தில் 1961ஆம் ஆண்டு குவைத் சுதந்திரம் அடைந்தது.

1991 பெப்ரவரி 26ஆம் திகதி குவைத் விடுதலை பெற்றபின்பு, குவைத் விமான சேவை மீண்டும் தொடங்கப்பட்டு, அதன் செயற்பாடுகள் உலக ரீதியாக விஸ்தரிக்கப்படுவதற்கான பாரிய திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதற்கிணங்க, குவைத் எயர் வேய்ஸ் கோர்ப்பரேசன் நிறுவனம் 17 புத்தம் புதிய விமானங்களைக் கொள்வனவு செய்தது. இப்பொழுது நிறுவனத்திடம் 'ஏ320-200' எஸ் விமானங்கள் மூன்று, 'ஏ310-300' எஸ் விமானங்கள் மூன்று, 'ஏ300 - 605' ஆர் விமானங்கள் ஐந்து, 'ஏ340 -300' எஸ் விமானங்கள் நான்கு, 'பி777' விமானங்கள் இரண்டு ஆகியன உள்ளன. அனைத்திலும் நவீன உபசரிப்பு முறைகள், பொழுதுபோக்குக்கான ஏற்பாடுகள் உள்ளன. இப்பொழுது நிறுவனம் உலகிலுள்ள மேலும் 46 நாடுகளுடன் விமான சேவையை மீள உருவாக்க எண்ணங் கொண்டுள்ளது.

குவைத் விமான சேவை வாரத்தில் ஐந்து தடவைகள் கொழும்புக்கு அதன் சேவையை நடத்துகின்றது. அமெரிக்கா, கனடா, ஐரோப்பா ஆகிய நாடுகளுடன் திறமையான தொடர்புகளைக் அது கொண்டுள்ளது. குவைத்தில் இரு மணித்தியாலங்களுக்கும் குறைவான இடைத்தங்கல் மட்டுமே. கொழும்புக்கும், அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்குமான விமானப் பறப்புகள பயணிகளுக்கு மிகவும் வாய்ப்பான நேரங்களிலே நடத்தப்படுகின்றன. உரிய நேரத்தில் பறப்புக்களை நடத்துவதற்கு விமான சேவை பெற்ற விருதே நிறுவனத்தின் பலமாகும். விமானத்தினுள் வழங்கப்படும் மிகத்தரமான உணவுகளுக்காக அண்மையில் "காஸ் ரோளமி" குழுவினால் விருது வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்பை வழங்குவதில் நிறுவனம் பெற்றுள்ள வரலாற்று சாதனைகளுக்காக மேலும் ஒரு விருதும் கிடைத்துள்ளது.

கொழும்பில் குவைத் எயர் வேய்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளாக சவுத் ஏசியன் ட்ரவல்ஸ் நிறுவனம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சேவையாற்றி வருகிறது. இது தேசமான்ய லலித் கொத்தலாவலவைத் தலைவராகவும் றொசான் குருசிங்கவை பிரதித் தலைவராகவும் திருமதி சிசிலி கொத்தலாவலவைப் பணிப்பாளராகவும் உஸ்ரேஸ் சில்வாவை பணிப்பாளர்/பொதுமுகாமையாளராகவும் கொண்டுள்ள சிலிங்கோ கொன்சோலிடேற்டட் நிறுவனத்தின் ஓர் உறுப்பாகும். குவைத் எயர் வேய்ஸின் இலங்கைக்கான முகாமையாளர் அப்துல்லா அல் அப்துல்லா.




இவர் நிறுவனத்திற்கும் ட்ரவல்ஸ் நிறுவனத்திற்கும் குவைத் தூதரகத்திற்கும் இடையே உயிர்நாடியாக இருந்து வருகிறார்.

அமெரிக்க, ஐரோப்பிய நகரங்கள் எவற்றுக்கும் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்யும் பயணிகளுக்குக் கொழும்பிலுள்ள குவைத் எயர் வேய்ஸ் நிறுவனம் ஒப்பற்ற வசதிகளை வழங்குகின்றது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் நிலையத்திலிருந்தும் இலவசமான போக்குவரத்துக்கள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதே போன்ற வசதிகளை எக்கணமி வகுப்புப் பிரயாணிகளுக்குக் கூட லண்டனிலும் வழங்குவதற்கான எதிர்பார்ப்புக்கள் எம்மிடம் உள்ளன.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கனடாவிலும் உள்ள எந்தவொரு நகரத்துக்குமான பயணச்சீட்டுக்களை உள்நாட்டில் கொள்வனவு செய்யும் பயணிகளுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் இலவசமான போக்குவரத்தை நாம் வழங்குகிறோம். இதற்கு எந்தவொரு கட்டணமும் அறிவிடப்படமாட்டாது.

வாகனத் தரிப்பிட வசதிகள் உள்ளிட்ட சகல நவீன வசதிகளுடனான சிலிங்கோ கட்டடத்தில் எமது புதிய அலுவலகம் அமைந்திருப்பதே ஒரு வித்தியாசமாகும். அதிநவீன வசதிகளுடனானது குவைத் எயர் வேய்ஸ் மட்டுமே என்பதை இது உணர்த்துகின்றது.

குவைத்தில் பணியாற்றும் 1,50,000 இற்கும் அதிகமான இலங்கையர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பை வழங்கிவருகின்றனர். வாரந்தோறும் நடத்தப்படும் ஐந்து விமான சேவைகளும் இத்தொழிலாளர்களுக்குப் பெரும் வசதிகளை வழங்குகின்றன.

இலங்கையில் குவைத் தூதரகம் திறக்கப்பட்டமையும் அது இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கும் ஆதரவும் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத்துறை நல்வாய்ப்புக்களை விருத்திசெய்யும் என்ற வகையில் பெருமகிழ்வு தருவதாகும்.

# தொழில் வளம்



## கனேடிய கணனிக் கல்லூரியில் தமிழ் மாணவர் இணைய வாய்ப்பு

கனடாவின் தலைநகர் றொறன்ரோவில் உள்ள கனடியன் வணிக கணனிக் கல்லூரி [The Canadian College of Business & Computers. (CCBC)] றொறன்ரோ நகரிலுள்ள் மாணவர்களுக்கு பிரயோக தகவல் பயிற்சி நெறிகள் பலவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தக கல்லூரியின் தலைவராகிய - இலங்கைப் பிறப்புரிமை கொண்ட - கனேடிய வதிவிடப் பிரஜையுமாகிய



செல்வன் கண்ணுத்துரையின் தகவலின்படி, சென்ற வருடத்தின் மத்தியிலிருந்து இக்கல்லூரி தனது மாணவ மட்டத்தினரை சர்வதேச ரீதியாக விஸ்தரிக்க திட்டமொன்றை உருவாக்கியிருக்கிறது.

பிரயோக தகவல் தொழில்நுட்ப சர்வதேச டிப்ளோமா பயிற்சி ஒன்று 18 மாதம் பயிற்சி நெறியாக நடைபெற இருக்கிறது. இந்த நெறியில் இலங்கை மாணவர்களை அனுமதிப்பதற்கு விசேட முன்னுரிமை வழங்கப்பட இருப்பதாக அவர் கூறினார்.

தேசாபிமானம் கொண்ட கண்ணுததுரை, தனது தாய்நாட்டு இளைஞர்களுக்கு கல்வி வாய்ப்புக் கொடுப்பதை இன்றைய சமாதான சூழ்நிலையில் ஒரு பங்களிப்பாக அமையும் என்று நம்புகிறார். இதற்கென பெருந்தொகையான பணத்தையும் தனது பொன்னான காலத்தையும் மூலதனமாகக் கல்லூரியில் இட்டிருக்கிறார்.

அவரது அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கைத் தமிழருக்கும் வாய்ப்பு வழங்குவதற்காக பிரசார வேலைகளை இக்கல்லூரி ஆரம்பித்திருக்கிறது.

இதற்கென 7,000 டொலர் தொடக்கம் 19,000 டொலர் பெறுமதியான 500 புலமைப் பரிசில்களை அறிமுகம் செய்யவிருக்கிறது. இதற்கான மாணவர் தெரிவுக்கு தமது பொது உளச்சார்புப் பரீட்சைகளையும் நடத்தவிருக்கிறது. இதுபற்றி சகல கனேடிய அமைச்சர்களுக்கும் உத்தியோகத்தர்களுககும் தெரியப்படுத்தப்பட்டிருககிறது.

தற்பொழுது இலங்கையில் வசிகசும் மாணவர்கள் இப்புலமைப் பரீட்சையில் சித்தியடையுமிடத்து கனடாவுக்குள் நுழைவதற்கு விஸா வழங்குவதில் குடியகல்வு திணைக்களம் சிரமப்படவேண்டும் என்பதையும் கண்ணுத்துரை அறிவார். இவ்விடயம் கனேடிய அரசுக்கும் நன்கு புரியும்.

21.01.2002இல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது, அறிவு சார் பொருளாதாரம் நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவும் என்பது பறறிக் கூறியதுடன் இதற்கான செலவினத்திற்குப் பணப்பற்றாக் குறை இருப்பதையும சுட்டிக் காட்டியுள்ளார். இருப்பினும் போதியளவு நிதியை வழங்க முடியாவிடினும் ஓரளவு நிதியை ஒதுக்க அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறினார்.

கண்ணுத்துரை போன்று கருணை உளளம் கொண்ட எத்தனையோ ஆதரவாளர்கள் கனடாவில் உள்ளனர். நோர்வே நாட்டினரால் முன்னெடுக்கப்பட்ட அரசு - புலிகளின் சமாதான உடனபடிக்கையை வரவேற்கும் கனடா, இத்தகைய ஆதரவாளர்களுடைய அனுசரணையுடன் இலங்கை மாணவர்களுக்கு உயர்தர கல்வி வாய்ப்புக்களை வழங்கத் தயாராக உள்ளது.

எனவே, இக்கல்லூரியின் பங்களிப்புடன் தனது தேசமக்களுக்குத் தன்னாலான உதவிகளைத் தருவதற்குத் தனக்கு சந்தர்ப்பம் கிட்டும் என்று கண்ணுத்துரை பூரணமாக நம்புகிறார். இதன்மூலம் உயர் கல்வியில் ஊக்கமுடையோரின் முயற்சி பலிதமாவதுடன் வேலைவாய்ப்புப் பெறும் நிலையும் நிச்சயமாக உயரவே செய்யும். ★

# புகைத்தலை நீக்கி புகழுடன் வாழ்வோம்

**உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் இன்றாகும். அதனை யொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

"பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல்" என்பது குறளாகும். ஒருவனது பேதைகள் எல்லாவற்றுள்ளும் மிக்கப் பேதைமையாவது தனக்காகாத ஒழுக்கத்தின் கண் விரும்பம் கொள்ளல் ஆகும். அந்த வகையிலே ஒரு மனிதனது வாழ்வை அணு அணுவாக மாய்த்துகொண்டிருப்பது புகைத்தல் ஆகும்.

புகைத்தல் இன்றைய உலகின் ஒரு சாபக்கேடாக மாறியிருக்கிறது. அறிவியல் ரீதியாக மனிதன் முன்னேறிக்கொண்டு சென்றாலும் தனக்கும், சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கின்ற புகைத்தல் போன்ற இழிவான தீய பழக்கங்கள் பலவற்றுக்கு அடிமைப்பட்டு முடங்கிக்கிடக்கிறான். நாளுக்குநாள் புகைத்தலினால் இறப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஒவ்வொரு நாளும் உலகில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் புகைத்தலால் இறக்கின்றனர். உலகில் ஒரு வருடத்தில் இறக்கும் 3.5 மில்லியன் மக்களுள் ஒரு மில்லியன் மக்கள் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்களே. சீனா, இந்தியா போன்ற நாடுகளிலேயே புகைத்தலின் தாக்கம் உச்சமாக உள்ளது. இந்த நிலை தொடருமானால் இன்னும் மூன்று மடங்கிலான மரணங்கள் 2020ஆம் ஆண்டளவில் நம்மை வந்தடையும் என்பது அறிவியலாளர்களின் மதிப்பீடாகும்.

**பரா.றமேஸ்**

உயிருக்கு பலத்த ஊறுவிளைவிக்கக்கூடிய 25 வகையான நோய்கள் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனையால் ஏற்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. பல்வேறு வகையான புற்று நோய்கள், இருதய நோய்கள் தொடர்பான சுவாச நோய்கள் போன்றவை புகைத்தலால் ஏற்படும் தாக்கங்கள் ஆகும்.

புகைத்தலில் ஈடுபடுபவர்களினால் அவர்கள் மட்டுமன்றி அருகிலுள்ளவர்களும் பாதிப்படைகின்றனர்.

இவ்வாறு மக்களை அழிக்கும் புகைத்தலை உலகில் இருந்து நீக்க நாமெல்லாம் உறுதியோடு செயற்படவேண்டும். வருங்காலம் நமது நாட்டை வளமுடன் பேணவேண்டிய எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி உலகப் புகைத்தல் மறுப்புத்தினமான இன்று உறுதியுடன் நாம் செயற்பட வேண்டும். புகைப் பழக்கத்திற்கு அடிமையாகி தம்மைத் தாமே படிப்படியாக அழிப்பவர்களைப் பற்றி சிந்திப்போம்; மன வலிமையுடன் செயற்படுவோம். புகைத்தலை நீக்கி புகழுடன் வாழ்வோம். ★

## முறிகண்டியில் 2கடைகள் எரிந்து நாசம்

வவுனியா,மே30

முறிகண்டிப் பகுதியில் கடந்த செவ்வாயன்று இரவு இரண்டு கடைகள் முற்றாக எரிந்து நாசமாயின. வேறு இரு கடைகளுக்கும் தீயினால் சேதம ஏற்பட்டது.

எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒரு கடையிலேயே தீப்பிடித்துக் கொண்டதாகத் தெரிகிறது. பெற்றோல் அருகில் விளக்கு வைக்கப்பட்டு இருந்ததென்றும், இதனாலேயே தீப்பற்றியதென்றும் கூறப்பட்டது.

தீயினால் ஒருவர் காயமடைந்தார். கடையில் இருந்த நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான எரிபொருள்களும், நாற்பதாயிரம் ரூபா பணமும் எரிந்து நாசமாகின. (ம)

## பிரேதத்தை அலுவலகத்தில் வைத்து போராட்டம் நடத்தினர் தொழிலாளர்!

### தலவாக்கலை தோட்டத்தில் சம்பவம்

தலாவாக்கலை,மே31

தலாவாக்கலை பகுதியில் தோட்டத்தொழிலாளர்கள் சக தொழிலாளி ஒருவரின் பிரேதத்தை தோட்டக்காரியாலயத்துக்கு எடுத்துச்சென்று அங்கு இரவிரவாக வைத்திருந்து புதுவித போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்தப் போராட்டத்திற்கு நிர்வாகம் பணிந்தது.

இதுகுறித்து தெரியவருவதாவது:-

தலவாக்கலை, நாகசேனை என்ற தோட்டத்தில் மரணமான ஒருவருக்காக இரண்டு மணியோடு வேலை விட நிர்வாகம் மறுத்தது. இதனை ஆட்சேபித்து தோட்டத் தொழிலாளர்கள் இறந்தவரின் உடலை தோட்டக் காரியாலயத்துக்கு எடுத்துச்சென்று வைத்திருந்தனர்.

காலஞ்சென்ற சுப்பிரமணி என்பவரின் மனைவியும் மகனும் தோட்டத் தொழிலாளிகளாக உள்ளனர். ஆயினும் சுப்பிரமணியின் மரணச் சடங்கிற்காக நிர்வாகம் 2 மணியோடு வேலை விடுவதற்கு இணங்கவில்லை. இதனால் ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் தாமாகவே வேலையை 2 மணிக்கு நிறுத்தினர். நிர்வாகமோ வழமைபோல் 5 மணிக்கே கொழுந்து நிறுக்கப்படும் என்று அறிவித்தது.

இதனால் மேலும் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் மரணமானவரின் பிரேதத்தை தோட்டக்காரியாலயத்துக்கு எடுத்துச்சென்று இரவு முழுவதும் அங்கேயே வைத்திருந்தனர்.

மறுநாள் காலை நிர்வாகத்துடன் ஏற்பட்ட சமரச முடிவினால் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது..

(க)

## பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,மே31

நிர்வாக நிறைவேற்று அலுவல்கள் வேலைவாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு வேலையற்ற பட்டதாரிகளுக்கு நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் நாளைமறுதினம் ஞாயிறு காலை 10.30 மணிக்கு வேலையற்ற பட்டதாரிகள்சங்க அலுவலகத்திற்கு வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த நேர்முகத் தேர்வுக்கு சங்கத்தில் பதிவு செய்துள்ள முகாமைத்துவ, வணிக, உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர்தேசிய வணிகவியல் டிப்ளோமா பெண்பட்டதாரிகள் அழைக்கப்பட்டிருப்பதுடன், இதுவரை 'தருண அருண' தொழிற்பயிற்சி திட்டத்தில் பதிவு செய்யாதவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களும் சங்க அலுவலகத்தில் வழங்கப்படும் என சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-13)

# யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் கடன் நிலுவையை நீக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே31

அத்தியாவசிய சேவையாளர் நாயகத்தின்கீழ் இயங்கிவந்த உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள ப.நோ. கூ.சங்கங்கள் பல கடந்த காலங்களில் செலுத்த வேண்டிய பல லட்சம் ரூபா கடனை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சங்கங்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை கடன் அடிப்படையில் இத்திணைக்களமே வழங்கி வந்தது. ஆனால், யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து இத்திணைக்களம் இயங்கமுடியாத நிலை வந்தது. இதனால் பெரும் தொகையான கடனைப் பெற்றுக் கொண்ட சங்கங்கள் அதனைத் திருப்பிச் செலுத்தமுடியாது போய் விட்டது.

தற்போது நாடு ஓரளவு சீரடைநது வருவதால் இக்கடனைத் திரும்பப் பெறுவதற்கு திணைக்களம் முயற்சித்து வருகிறது. எனினும் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் நலிவுற்றிருக்கின்றன.

இந்நிலையில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவை திணறுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு அந்தக் கடன்தொகையை நீக்கிவிடுவதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக உதவி ஆணையாளர் உதயனுக்குத் தெரிவித்தார். (க-ரி)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே31

புங்கங்குளம், வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அத்துடன் தீ மிதித்தலும் இடம்பெறவுள்ளது. (க-10-17)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய கும்பாபிஷேக தின விழா இன்று ஆலயத்தில் காலை 7 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சதாசிவசுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் இடம்பெறும் கிரியைகளில் சங்காபிஷேகம், திருக்கல்யாணம், சுவாமி வீதியுலா முதலானவை மாலை ஆறுமணிவரை இடம்பெறவுள்ளன. (க-4-12)

★ ★ ★

தென்மராட்சி,மே31

கொடிகாமம் பெரிய நாவலடி ஞான வைரவர் ஆலய பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (க-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே31

சுழிபுரம் பறாளாய் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய நவோத்தர சகஸ்ர மகா சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நண்பகல் அன்னதானம் வழங்கப்படும். பிற்பகல் 3மணிக்கு கந்தரனுபூதி மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். மாலை 5 மணிக்கு முருகப்பெருமான் விஷேட அலங்காரத்துடன் வீதியுலா வருவார். (க-6)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே31

கோப்பாய் தெற்கு, புனித மரியாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பெருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன. (க-10)

## தீவுப்பகுதி ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபைத் தேர்தல் விரைவில்

யாழ்ப்பாணம்,மே31

தீவுப்பகுதிக்கு மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து அங்குள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கான புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை மிக விரைவில் நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தீவுப்பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்தமையால் அங்கிருந்த ப.நோ.கூ.சங்கங்களின் பணிப்பாளர் சபையை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளரே நியமித்திருந்தார்.

ஆனால், தற்போது அங்கு மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதால் புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய ப.நோ.கூ.சங்கங்களின் இயக்குநர்சபை விரைவில் தெரிவு செய்யப்பட இருக்கின்றது. (க-ரி)

## ஆசிரியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே31

பொது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கடந்த செவ்வாயன்று நடைபெற்றது.

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞான பகுதியின் 'ஏ' பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்பட்டறையில் யாழ்.மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 36 ஆசிரியர்கள் பங்குபற்றினர்.

கணனி சம்பந்தமான அடிப்படை விளக்கங்கள், பொதுத் தொழில் நுட்பத் தத்துவம், இணையத் தேடல் என்பன பற்றிய விளக்கங்களும் செய்முறைப் பயிற்சிகளும் இப்பட்டறை நிகழ்வில் வழங்கப்பட்டன. (க-13)

## நல்லூரில் கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம்,மே31

நல்லூர் முடமாவடிச் சந்தியில் அமைந்துள்ள கடையொன்று செவ்வாய்க்கிழமை இரவு உடைக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடையின் பூட்டுக்கள் வாள் மூலம் அறுக்கப்பட்டு உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர். புதிய ஜெனரேட்டர், பற்றறிகள், பால்மா வகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்களே அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாகக் கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார். திருடர்கள் வாகனம் ஒன்றில் வந்தே இந்தத் திருட்டை மேற்கொண்டிருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது.

இத்திருட்டுக் குறித்து யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-12)

# செய்திக் கொத்து

## ஏழாலை வடக்கில் வீடுகள் புனரமைப்பு

ஏழாலை,மே31

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஏழாலை வடக்குப் பகுதி மக்கள் தமது வீடுகளைப் புனரமைப்பதிலும், புதர் மண்டிக் கிடக்கும் காணிகளைத் துப்புரவு செய்வதிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை, மேற்படி பகுதி விவசாயிகள் தமது விவசாய நிலங்களைப் பண்படுத்துவதிலும், பயிர்ச்செய்கை தொடர்பான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (எ-ரி)

## ஆஞ்சநேயர் சிலை பிரதிஷ்டை

யாழ்ப்பாணம்,மே31

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு இந்தியாவிலிருந்து ஆஞ்சநேயர் சிலை ஒன்று எடுத்துவரப்பட்டுள்ளது.

மூளாய் பிள்ளையார் ஆலயத்திலிருந்து இன்னும் சில தினங்களில் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. (எ-15-ரி)

## ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

யுத்த நடவடிக்கைகளின் போது பலத்த சேதமடைந்த கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக பூசை வழிபாடுகள் எதுவுமின்றி இருந்த மேற்படி ஆலயப்பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (எ-ரி)

## வாராந்த வழிபாடு மீண்டும் ஆரம்பம்

கொழும்புத்துறை,மே31

கொழும்புத்துறைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து புனித செபமாலை அன்னை ஆலயத்தில் வாராந்த வழிபாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயத்தில் சனிக்கிழமைகளில் மாலை 5.30 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7 மணிக்கும் திருப்பலி நிறைவேற்றப்படும் என பங்குத் தந்தை அருள்திரு எஸ்.யேசுரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார். (எ-ரி)

## மதகு அமைக்கும் வேலை ஆரம்பம்

வலி.தெற்கு,மே31

வட்டுக்கோட்டை, சங்கரத்தை அந்திரான் வாய்க்காலின் மதகு அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வழுக்கி ஆற்று வாய்க்கால் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை சங்கரத்தை விவசாயிகள் சம்மேளனம் இந்த வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளது. (எ-152-ரி)

## அதிபர் மீண்டும் கடமையில்

காரைநகர்,மே31

சுகவீனத்தை அடுத்து நீண்ட லீவில் சென்றிருந்த கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி மீண்டும் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-73)

# காரைநகரில் பனம் பொருள் கொள்வனவு நிலையம்

காரைநகர்,மே31

பனை அபிவிருத்திச் சபையினால், காரைநகரில் பனம் சார் பொருள்கள் கொள்வனவு நிலையம் ஒன்று ஜூன். மாத நடுப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படும் இந்த நிலையத்தில், பனம்சார் கைவினைப் பொருள் பயிற்சி நிலையமும், தும்புத் தொழிற்சாலையும் செயற்பட உள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்தார்.

காரைநகர் மேற்கில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்க உள்ள இந்த நிலையத்தில் முதற்கட்டமாக 25 பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பனம்சார் கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சி வழங்குவதுடன் மாதாந்தம் 600 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பயிற்சி நெறி 6 மாதங்களைக் கொண்டது எனவும் தெரிவித்தார்.

வெகுவிரைவில் காரைநகர் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள காணியில் பனம் "கைத்தொழில் பூங்கா" ஒன்றினை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அங்கு வடிசாலை, கள் அடைத்தல், பனங்கட்டி தொழிற்சாலை, தும்பு உற்பத்தி, பனாட்டு உற்பத்தி, பனை மரத்திலான கைவினைப் பொருள்கள் செய்தல் போன்ற தொழில்களை மேற்கொள்வதுடன் கைவினைப் பொருள்களுக்கான பயிற்சி நிலையத்தையும் நடத்த உள்ளதாகவும் அவர் சொன்னார். (க-73)

# இன்னும் ஒருமாத...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதனைகளை முறியடிக்குமா என்பதனை ஜூலை 31ஆம் திகதிவரை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இம்முறை 32 நாடுகள் உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இவற்றுள் சிலவற்றைத் தவிர ஏனைய அணிகள் பலம்வாய்ந்த அணிகளாகவே காணப்படுகின்றன. சீனா, பராகுவே, மெக்சிக்கோ, டென்மார்க் போன்ற நாடுகள் தம்மோடு விளையாடும் அணிகளுக்கு அச்சுறுத்தும் அணிகளாகவே உள்ளன. இம்முறை பங்குபற்றும் நாடுகளில் பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, பிறேஸில், உருகுவே போன்ற அணிகளே கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்புடன் காணப்படுகின்றன.

இதில் பிறேஸிலைப் பொறுத்தவரை 4 தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற பெருமையோடு உலகிலுள்ள பல தலைசிறந்த வீரர்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அதுமட்டுமல்லாது இதுவரை 16 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றிய பெருமையும் கொண்ட நாடு பிறேஸில். இவ்வாறு இருந்தபோதும் இம்முறை இது உலகக கிண்ணப் போட்டிக்கு தகுதி பெறுமா என்பது இறுதிவரை கேள்விக்குறியாகவே இருந்தது. இருந்தபோதும் பலத்த போட்டியின் பின் இறுதித்தொடரில் தெரிவாகியுள்ளது.

பிறேஸில் அணி வெற்றி பெறுவது உறுதி என அவ்வணியின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். இம்முறை நடைபெறும் போட்டி பற்றி பிறேஸில் வீரர் ரொனால்டோ குறிப்பிடுகையில் "கடந்த போட்டியின் இறுதி ஆட்டத்தில் எமது அணியை தோல்வியை அடையச் செய்த பிரான்ஸ் அணியை வெற்றிகொள்ளும்வரை எனது மனம் ஆறுதல் அடையாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல ஆர்ஜென்ரீனா அணி பல முன்னணி வீரர்களைக் கொண்டு விளங்குகின்றது. 3:3:2:2 என்ற முறையில் வீரர்களை ஒழுங்கமைத்து விளையாடும் இந்த அணி 2000-01 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற 'கொன்மெபோல்' போட்டித் தொடரில் 18 ஆட்டங்களில் 13இல் வெற்றியும் ஒரு போட்டியில் தோல்வியையும் அடைந்தது. 4 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. இதன் அடிப்படையில் இந்த அணியும் பலம் வாய்ந்த அணியாகக் கருதப்படுகின்றது. அதேபோல மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் ஆகிய அணிகளும் மிகுந்த பலத்தோடு களமிறங்குகின்றன.

இம்முறை முதல் முறையாக உலகக் கிண்ண இறுதித் தொடருக்குத் தெரிவுசெய்யப்பட்ட சீனாவையும் ஏனைய நாடுகளை விடக் குறைத்து மதிப்பிடமுடியாது.

இவ்வாண்டு அனைத்தினது பலத்தையும் பலவீனத்தையும் அடுத்து வரும் நாள்களில் உதைபந்தாட்ட ரசிகர்கள் ரசிக்கலாம்.

★

யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

**கணனி பயிற்சிநெறி ஆரம்பம்**

மேற்படி பயிற்சிநெறி நாளை (01.06.2002) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. குறித்த பயிற்சி நெறியில் கற்கவிரும்புவோர் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

- அதிபர்.

(4353)

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

தென்மராட்சி பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறும் இலக்கங்கள்:

முதலாம் பரிசு இலக்கம் :- 08528
இரண்டாம் பரிசு இலக்கம் :- 06557
மூன்றாம் பரிசு இலக்கம் :- 04024

பத்து ஆறுதல் பரிசுபெறும் இலக்கங்கள்:

1. இலக்கம்:- 10400
2. இலக்கம்:- 05121
3. இலக்கம்:- 05929
4. இலக்கம்:- 08999
5. இலக்கம்:- 10224
6. இலக்கம்:- 05875
7. இலக்கம்:- 10201
8. இலக்கம்:- 10394
9. இலக்கம்:- 04098
10. இலக்கம்:- 00613

மேற்படி பரிசுச் சீட்டிற்குரிய பரிசுப் பொருள்களை எதிர்வரும் 12.06.2002 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

தலைவர் (C/22342) பொருளாளர்

**தூரிகை**

நுண்கலை வளாகம்

புதிய பயிற்சி வகுப்புகள்

☆ உடையமைத்தல்
☆ கேக் ஐசிங்
☆ பூவேலை + கைப்பணி
☆ கூந்தல் அலங்காரம்
☆ துணியில் வர்ணமிடல்
☆ புகைப்படக்கலை

மேற்படி பயிற்சிகளுக்கான புதிய பிரிவுகள் 02.06.2002 இலிருந்து ஆரம்பமாகின்றன. கலந்துகொள்ள விரும்புவோர் எமது இரு நிறுவனங்களிலும் தொடர்புகொள்ளலாம்.

செங்குந்தா வீதி, கல்வியங்காடு.
ம.ம.வி.வீதி, நெல்லியடி. (4351)

# திருமறைக் கலாமன்றம்

வழங்கும்
பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திரா
நாடகக் குழுவினரின்

## මනමේ மனமே MANAME

நாடகம் (சிங்களம்)

* சிங்கள நவீன அரங்கின் தந்தை என அழைக்கப்படும் காலஞ்சென்ற பேராசிரியர் எதிர்வீர சரச்சந்திராவின் தயாரிப்பில் உருவாக 1956ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக மேடையேற்றப்பட்டுவருகிறது.
* க.பொ.த. உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பயில்பவர்களுக்கும், சிங்கள நாடக வரலாற்றை கற்கைநெறியாகக்கொண்ட மாணவர்களுக்கும், கலை ஆர்வலர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது.

**யாழ்ப்பாணத்தில்**
**முதல் தடவையாக மேடையேறுகிறது.**

02-06-2002 ஞாயிறு மு.ப. 10.30, பி.ப. 2.30 மணி
*யாழ். வேம்படி மகளிர் கல்லூரி*
03-06-2002 திங்கள் மாலை 6.45 மணி
*மன்ற அரங்கு*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரவேசம்:* 20.00, 50.00, 100.00

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2393
(C/22349) website: www.cpateam.org



# திருநாள் கடைக்கான ஏலம்

பாசையூர் புனித அந்தோனியார் திருநாள் கால கடைகளுக்கான ஏலம் நாளை (01-06-2002) சனிக்கிழமை பாசையூர் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 4.00மணிக்கு இடம்பெறும்.

*புனித அந்தோனியார் வி.கழகம், பாசையூர்.* (4362) - நிர்வாக சபையினர்.



உ

## அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாளின் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபத்தின்

# திறப்பு விழா

அன்னதான சபையினரால் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபத்தில் 10.06.2002 திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும். இரவு 8.30 மணியளவில் அம்பாள் வீதிஉலா வந்த பின் எமது சபையின் போசகர் திரு. சு. செந்தில்நாதன் அவர்களின் ஆசியுரையுடன் சமய சொற்பொழிவும் சமய சம்பந்தமான இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்பதை அம்பாளின் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(4358) - அன்னதான சபையினர்.





உ
திருமால் துணை

## கச்[illegible] ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய வருடாந்[illegible]கல் உற்சவம் 31.05.2002

இன்று நடைபெறவி[illegible] பொங்கல் உற்சவம் சிறப்புடன் நடைபெற [illegible]மாலின் திருவருளே துணை என வேண்டி நிற்[illegible]

செல்வி [illegible]ணுகுமாரி
*"திருவேங்கடம்"* பூபாலசிங்கம்,
*அச்சுவேலி.* (4357) செல்வி விஷ்ணுஸ்ரீ பூ[illegible].



# அறிவித்தல்

**அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், சாவகச்சேரி**

*அன்புடையீர்,*

மேற்படி தேவஸ்தானத்தில் சில மாதங்கள் தற்காலிகமாக கடமையாற்றிய *சுதா* என்று அழைக்கப்படும் *மகாதேவ சர்மா* மேற்படி ஆலயத்தில் இருந்து விலகிவிட்டார் என்பதையும் அவருக்கும் இவ்வாலயத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை எனவும் மேற்படி ஆலயம் சம்பந்தமாக அவருடன் எந்தவொரு தொடர்பு வைத்திருந்தாலும் அதற்கு தேவஸ்தானம் பொறுப்பல்ல என்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

ப.மகாகணபதி சர்மா.
*(தர்மகர்த்தா)*
(4364)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு. அம்பலவாணர் கிரிதரன்
அவர்களின் தந்தையார்

## அமரர் சபாபதிப்பிள்ளை அம்பலவாணர்

அவர்கள் சிவபதமடைந்தமைக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கினறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யா/பொன்பரமானந்தர் ம.வி., குரும்பசிட்டி.
(4360)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே31

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை யாழ். [illegible]துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்[illegible].

நாளை இ[illegible] ஆட்டங்களில் பங்குபற்றும் [illegible]களின் விவரம் வருமாறு:-

★ காலை 8.30 மணி - மானிப்பாய் பரிஷ் வி.க. எதிர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வி.க.

★ பிற்பகல் 1.30 மணி - ஜொனியன்ஸ் வி.க. எதிர் யாழ்ப்பாணம் சென்றல் வி.க. (ஐ-3)

## ஊர்காவற்றுறை அதிபர் செயலமர்வு ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை கல்விக்கோட்டப் பணிமனையில் இன்று நடைபெறவிருந்த கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலைத் தொகை மதிப்பீட்டுச் செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணங்களினால் நடைபெற மாட்டாது என்றும் -

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குறிப்பிட்ட செயலமாவு நடைபெறும் என்றும் தீவக வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வ.இராதாக்கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (எ)

## குடிதண்ணீர் குழாய்கள் சீரமைப்பு

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதி, சுவாமியார்லேன் பகுதிகளில் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோக மார்க்கங்களை சீர்திருத்தும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இதேவேளை விபுலானந்தர் வீதிக்கான குடிதண்ணீர் விநியோக மார்க்கத்தை இராணுவத்தினர் பயன்படுத்துவதனால் அவ்வீதி மக்களுக்கு தண்ணீர்வசதி கிடைக்க ஒழுங்கு செய்யாமையினால் அப்பகுதி மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். (க-ரி)

## கைத்தறிப் புடைவை விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்ப்பாணம் தொழிற்றுறை திணைக்களத்தின் கைத்தறிப் புடைவைகள் விற்பனைக் கிளையொன்று யாழ். ஆரியகுளம் சந்தியில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

குடாநாட்டிலுள்ள நெசவு சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகள், படுக்கை விரிப்புகள் என்பன இங்கு விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (க-4)


# பொருளியற் கல்லூரி

கணக்கீடு
Mr.முகுந்தன்
B.B.A. (Hons) F.M.Spl.

**2004 A/L**
யாழ். - இணுவில்
இரு இடத்திலும்

*தனிவியாபார முடிவுக்கணக்கு*

**2003 A/L - யாழ்நகரில்**

உற்பத்திக் கணக்கு
ஆரம்பம்: 01.06.2002 சனி.
(4366)



நிரஞ்சனாஸ்
[illegible]
(C-22147)



நாகம்மாஸ்

மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ்
நடிப்பில்

# கன்னத்தில் முத்தமிட்டால்

(ரீலஸ்)

காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)



# ராஜா யாழ்ப்பாணம்

50ஆவது நாள்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக்
நடித்த

# தமிழன்

தினசரி: 10.30, 2.30, 5.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/22146)



## இளமை மற்றும் அழகின்

# ரகசியம்




விஞ்ஞான சான்று பெற்றது. பக்க விளைவுகள் இல்லை.

தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்

# பயோட்டின் - H250

உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...

மேலும்

1. தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக்கூடிய முடி
2. சரும நோய், தோல் சுருங்கி வயதான தோற்றம், காய்ந்த சருமம்
3. சீரற்ற உடையக்கூடிய நகம்

போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற **BIOTIN H** உதவுவதாக விஞ்ஞானரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.

எமது அபிமான வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!

அனேகமானோரின் வேண்டுகோளுக்கிணங்க தற்பொழுது யாழ்நகரின் எல்லா முன்னணி பார்மஷிகளிலும்

**BIOTIN H250** கிடைக்கப்பெறும்.

ஆர்கெம் - கொழும்பு.
தொ.இ. 01-470290, 077-805738.
E-mail: arkem@sltnet.lk
(C/22348)



# வான் விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட
56- தொடர் இலக்கத்தைக் கொண்ட
LITEACE வான் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* 191, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(4359)


# மரண அறிவித்தல்கள்

## சபாபதிப்பிள்ளை அம்பலவாணர்

**(ஓய்வுபெற்ற லிகிதர், கல்விக் கந்தோர் - யாழ். மாவட்டம்)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை அம்பலவாணர் அவர்கள் நேற்று (30.05.2002) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் விமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முரளீதரன், லதா (மயிலிட்டி றோ.க.), கிரிதரன் (யூனியன் கல்லூரி), விஜயா (சுகாதாரத் திணைக்களம், திருகோணமலை), ராதா (மயிலிட்டி றோ.க.), பிரகாஷ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கிருபானந்தன் (மானிப்பாய் ப.நோ.கூ.ச.), செல்வரதி (வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜலக்ஸி, அபிநயன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.05.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி: *தேவாலய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (C/22346)
தகவல்: குடும்பத்தினர்.

## சோமசுந்தரம் பரராஜசிங்கம் (வைத்தியர்)

**(முன்னாள் ஊழியர், யாழ். மாநகர சபை)**

வண்ணார்பண்ணை, ஐயனார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாக்வும்கொண்ட சோமசுந்தரம் பரராஜசிங்கம் அவர்கள் நேற்று (30.05.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி பரராஜசிங்கம் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற [illegible] மற்றும் கணேசலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), [illegible]மலர், காலஞ்சென்ற திலகவதி மற்றும் சோமசேகரம் (இந்தியா), யோகரூபி, இராஜேஸ்வரன் (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சு.விவேகானந்தன் (ஆசிரியர், இருபாலை கந்தவேள் த.க.பாடசாலை), இ.சிவகுமார் (திட்டமிடல் அலுவலர் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு), காலஞ்சென்ற வசந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் க.பிரசாந்தினி, க.அகிலேசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வண்ணை கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (4367)
தகவல்: ப.கணேசலிங்கம் (மகன்)

# பிரிட்டிஷ் பாணியில் அதிகாரப் பகிர்வு!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

லண்டன்,மே31

பிரிட்டிஷ் பாணியில் இங்கேயும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது பற்றிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை செய்துவருகிறார்.

பிரிட்டனின் அதிகாரப்பகிர்வு முறையை அக்கறையுடன் ஆராய்ந்து வருகிறோம். ஸ்கொட்லாந்து, வேலஸ், வட அயர்லாந்து ஆகிய பிராந்தியங்களுடன் பிரிட்டன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளது. அந்த அதிகாரப்பகிர்வு முறையை இலங்கையும் பின்பற்றினால் என்ன என்று பிரதமர் ஆலோசித்து வருகிறார்.

லண்டன் ஹில்ட்டன் ஹோட்டலில் இடம்பெற்ற லண்டன் ஐ.தே.க. உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதமர் இதைத் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கை இனி ஒருபோதும் யுத்தநிலைவரத்தை எதிர்நோக்காது; இது உறுதி. அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் வெகுவிரைவில் ஆரம்பமாகும். பேச்சுக்களை ஆரம்பிக்கும் திகதியை இறுதியாக்குவது பற்றி சமாதான அனுசரணையாளர்களான நோர்வேக் குழுவினர் தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.

எமது அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் வெளிப்படையானவை. சமாதானத்தை நோக்கிய நடவடிக்கைகள் வேகமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் கருதவில்லை. எமது படிப்படியான அணுகுமுறைகள் சில அமைப்புகளால் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன.

சமாதானத்தை அடையும் முயற்சியில் வெற்றிபெறுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும்.

சமாதானம் காணவேண்டும் என்பது எமது கட்சி சார்ந்த விடயம் அல்ல. எமது அரசு சார்ந்ததும் அல்ல. அது எமது நாடு சார்ந்தது".

- இவ்வாறு பிரதமர் அங்கு கூறினார். (ஐ)

# கரு தலைமையில் கூடிய அமைச்சரவை!

## ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லை

கொழும்பு,மே31

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லை. இனிவரும் அமைச்சரவைக் கூட்டங்கள் ஜனாதிபதி மாளிகையிலோ அல்லது அலரி மாளிகையிலோ நடைபெறமாட்டா. அமைச்சரவைக்கான உத்தியோகபூர்வ அலுவலகத்திலேயே கூட்டங்கள் நடைபெறும் என்று சபை முதல்வரும் நீதி, பௌத்தசாசன அமைச்சருமான டபிள்யூஜேஎம்லொக்கு பண்டார கூறினார்.

நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவற்றைக் கூறினார்.

அமைச்சரவைக் கூட்டம் தொடர்பாக அமைச்சரவைச் செயலாளர் வெஹறகொட உரியநேரத்தில் ஜனாதிபதிக்கும் அறிவித்திருந்தார். ஆயினும், அமைச்சரவைச் செயலகத்தில் போதிய பாதுகாப்பு இல்லை என்பதால் தம்மால் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என்று ஜனாதிபதி அறிவித்தார். தற்பொழுது பிரதமரும் நாட்டில் இல்லை. எனவே அரசியல் சட்டவிதிகளுக்கு அமைய கூட்டத்திற்கு தலைவர் ஒருவரை நியமிக்கும உரிமை அமைச்சரவை உறுப்பினர் களுக்கு உண்டு. அதன்படி தலைவராக அமைச்சர் கரு ஜயசூரியாவின் பெயரை அமைச்சர் டபிள்யூ ஜே.எம்.லொக்கு பண்டார முன்மொழிய, அமைச்சர் ரவி கருணாநாயக்க வழிமொழிந்தார். அதன்பின் அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இனிவரும் அமைச்சரவைக் கூட்டங்கள் அனைத்தும் அமைச்சரவைச் செயலகத்திலேயே நடைபெறவேண்டும் என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் லொக்கு பண்டார கூறினார். (ஐ)

## அதிரடிப்படை தாக்குதல்

அம்பாறை,மே31

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவுப் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு விசேட அதிரடிப்படையினரால் நான்கு இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-10)

### சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சி வெற்றிபெறத் தமிழர், முஸ்லிம், சிங்களவர் ஆகிய அனைத்து சமூகங்களினதும் உரிமைகள் மதிக்கப்படவேண்டும். அந்த உரிமைகள் சட்டத்தின்மூலம் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் வன்முறை வகிக்கக்கூடிய பங்கு எதுவும் இல்லை என்பதைப் புலிகள் இயக்கம் உணரும் என்று நாம் நம்புகின்றோம்.

பிரிட்டனில் புலிகள் இயக்கம் மீதான தடைநீக்கப்படுவது குறித்து ஆராயப்படுவதற்கு முன்னர் பயங்கரவாதத்தை முற்றாக நிராகரிப்பதை புலிகள் இயக்கம் எடுத்துக்காட்டவேண்டும்.

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-10)

### மணம்முடிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணமகளை டென்மார்க்குக்கு அழைத்துச் செல்வதற்காக மன்னார் சென்ற அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. படகு விபரீதத்தைக் கேள்வியுற்ற அவர் உடனடியாக அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தார். பிரஸ்தாப யுவதியின் அடையாளங்களை அவர் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

புங்குடுதீவில் கரையொதுங்கிய அந்த யுவதியின் சடலம் அரச செலவில் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் மணமகனின் விருப்பத்துக்கு இணங்க சடலத்தைத் தோண்டி எடுத்து இந்து சமய முறைப்படி தகனம் செய்ய யாழ். நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

யுவதியின் சடலத்தை தகனம் செய்து அஸ்தியை மட்டும் எடுத்துக்கொண்டு டென்மார்க் திரும்பவிருக்கிறார் மணமகன்.

1990ஆம் ஆண்டு தமிழகத்துக்கு சென்றிருந்த பிரஸ்தாப யுவதியை தமிழகத்தில் இருந்து விமானத்தில் அழைத்துவர கடவுச்சீட்டு பெறமுடியாமற்போனதால் அவரை படகுமூலம் தாயகத்துக்கு அனுப்பிவிட்டு மணமகனான இளைஞர் விமானம் மூலம் கொழும்பு வந்து அங்கிருந்து மன்னார் சென்றதாகக் கூறப்படுகிறது.(ஐ-3)

# அரசின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளமுடியாது!

## புலிகள் பிரமுகர் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,மே31

தீவகத்தில் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக அங்கு செல்வதற்கு அரசால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்கமுடியாது என்று விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

தீவகத்தில் விடுதலைப் புலிகள் அரசியல் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு 12 நிபந்தனைகளை கண்காணிப்புக்குழுவுக்கு அரசு அனுப்பியுள்ளது.

இது தொடர்பாகக் கேட்டபோதே இளம்பரிதி இப்படிக் கூறினார்.

அரசு விதித்துள்ள நிபந்தனைகள் மக்களை அச்சுறுத்துவனவாக அமைந்துள்ளன. அந்த நிபந்தனைகளை ஏற்று மக்கள் பணியை மேற்கொள்ள முடியாது. மக்கள் மத்தியில் உண்மையான அரசியல் பணியை மேற்கொள்வதாயின் நிபந்தனைகள் எதுவுமின்றி சுதந்திரமாக எங்களை அனுமதிக்கவேண்டும்-என்றார். (ஐ-3)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்தப்படும் என்று கடற்படையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்றம் நிலவுவதால் இந்திய போர்க்கப்பல் கொழும்புக்கு வரும் தினத்தை வெளியிட அதிகாரிகள் மறுத்திருக்கின்றனர். (ஐ-10)

### ஜூன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல் ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் இருந்து படையினர் குறிப்பிட்ட தினதத்துக்குமுன் வெளியேறுகின்றபோதிலும அவற்றை உடனடியாகத் திறந்து இயங்கவைக்க முடியுமா என்பது சந்தேகமே என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஐ-51)

### பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் அறிவிப்பார். இந்த நால்வரில் மூவர் நிரந்தரமாகத் தொடர்ந்து பேச்சுக்களில் பங்குபற்றுவர். நான்காவது நபர் பேச்சுக்களில் பரிசீலனை செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புபட்டவராக இருப்பார். அவர் அவ்வப்போது நியமிக்கப்படுவார்.

நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ஊடாக புலிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக கோயில்களிலும் பாடசாலைகளிலும் நிலை கொண்டுள்ள படைகள் அகற்றப்பட வேண்டும்.

மீன்பிடித்தடைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும் என புலிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இரண்டொரு கோயில்களில் மட்டுமே இப்பொழுது படைகள் இருக்கின்றன. அவற்றையும் அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மீன்பிடித் தடையை முற்றாக நீக்குவது குறித்து அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்கிறது.

நோர்வே குழுவுடனான அரசாங்கக் குழுவின் சந்திப்பின் போது பேச்சு நிகழ்ச்சிநிரலைத் தயாரிப்பதிலும் திகதியைத் தீர்மானிப்பதிலும் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது.

இரு தரப்பிலும் பரஸ்பர முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை பாரதூரமானவை அல்ல என்று கண்காணிப்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார். (ஐ-10)

### கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களில் ஒருவரான கிளிநொச்சியைச் சேர்ந்த அன்ரனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் படகு விபத்தில் உயிரிழந்தவர்களில் புங்குடுதீவுக் கடற்கரையில் சடலமாக கரை ஒதுங்கிய அன்ரனியின் ஜெயதேவி என்பவரின் மரண விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சமயமே இவரது கணவரான அன்ரனி இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நடந்த விசாரணையின் போது அவர் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த நாங்கள் 18பேர் பிளாஸ்டிக் படகுமூலம் வன்னியை நோக்கிக் கடந்த 22ஆம் திகதி புறப்பட்டோம்.

கடும் காற்றில் சிக்கிய எமது படகு மறுநாள் காலை 7.30 மணியளவில் கவிழ்ந்தது. அதில் பயணஞ் செய்த எனது மனைவியும் மகளும் மற்றும் இரு பெண்களும் கடலில் வீழ்ந்தனர். 'எங்களைக் காப்பாற்றுங்கள்' என அவர்கள் அவலக்குரல் எழுப்பினர். ஆனால் எங்களால் எதுவுமே செய்யமுடியவில்லை. கவிழ்நத படகு ஒரு மேடு போன்ற பாறையுடன் மோதியது. பெரும் சிரமப்பட்டு எஞ்சிய 14பேரும் அந்த மேட்டில் ஏறினோம். மறுநாள் மாலை 5மணியளவில் அப்பகுதியில் மீன்பிடிப் படகுகள் தென்பட்டன.

அபயக்குரல் எழுப்பி அந்தப் படகுகளை அருகில் அழைத்தோம். அந்தப் படகுகளின் உதவியுடன் நாம் மன்னார் திரும்பினோம். பின்னர் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டோம்.

அந்த மணல்பாறை மேட்டில் இருந்து 33மணிநேரத்தைக் கழித்தோம். அச்சமயம் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிநின்றோம். உணவு, தண்ணீர் வசதியில்லை. குளிரால் நடுங்கியும் வெயிலில் துவண்டும் கஷ்டப்பட்டோம்.

சிலரின் சடலங்கள் புங்குடுதீவில் கரை ஒதுங்கியதாக மன்னாரில் தங்கியிருந்தபோது அறிந்து இங்கு வந்து மனைவியின் சடலத்தை அடையாளம் காட்டினேன். எனது மகளின் சடலம் இதுவரை கரைஒதுங்கவில்லை - என்றார்.

அவரது விருப்பப்படி மனைவியின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (ஐ-3-139)

ஈசன் கல்வி நிலையம்
A/L 2003 PAPER CLASS
(A/L 2002 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)
CHEMISTRY — திரு.சிவத்திரன் B.Sc. — Mon., Tue. - 3.30p.m.
PHYSICS — திரு.குமரன் B.Sc. — Mon., Tue. - 5.00p.m.
ஆரம்பம்: 03.06.2002 (Mon.) 3.30 p.m.
பௌதிகவியல்
A/L 2003, 2004
திரு.குமரன் B.Sc.
காந்தப்புலம் — Fri.: 6.30 a.m., 5.00 p.m. — ஆரம்பம்: 31-05-2002 (Fri.) 5.00 a.m.
இலத்திரனியல் — Sat., Sun.: 4.30 p.m. — ஆரம்பம்: 01-06-2002 (Sat.) 4.30 p.m.
(4323)

IBMS DOUBLE + SCHOLARSHIP PROGRAM 2002/2003
மேற்படி புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் யூன் 2ம் திகதி (02/06/2002) அன்று பின்வரும் பரீட்சை நிலையங்களில் காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை (இலங்கை நேரப்படி) நடைபெறும்.
1. யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி
2.யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்
3.யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
4. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (வடமராட்சி விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)
இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சனிக்கிழமை 01/06/2002 வரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத யாழ்ப்பாண, சங்கானை விண்ணப்பதாரர்கள் எமது தலைமைக் காரியாலயத்திலும் வடமராட்சி விண்ணப்பதாரர்கள் நெல்லியடிக் கிளையிலும் உடன் தொடர்பு கொள்ளவும்.
இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் பரீட்சைத் திகதியன்று காலை 9.00 மணி (பு.நே) இற்கு முன் தலைமைக் காரியாலயத்திற்கு தவறாது சமூகமளிக்கவும்.
Head Office :- No.701,K.K.S Road, Jaffna.
Branches :- Main Road, Chankanai. N.M.M.V Road, Nelliyadi.
Phone - 021-3165 e mail - ibms@sltnet.lk
நிர்வாகி.
I B M S

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2002 PHYSICS
PAPER CLASS
By: ஜெயசீலன் B.Sc.
ஆரம்பம்: 02-06-2002
Sun. - 7.30
(4344)

சுனில் ஆட்ஸ்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
25-05-2002 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்கள் வந்துவிட்டன.
பெற்றுக்கொள்ளவும்.
Sunil Arts
(C/22347)

யாழ். - கொழும்பு வான் சேவை
அழைப்பவர்கள்
செல்வம் ஸ்ரோர்ஸ்,
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No. - 3605
(C/22351)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.